பக்கங்கள்:12 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 03 சனிக்கிழமை 16.04.2022 கதிர் 162

இது ரகசியம் அல்ல!

எதிர்க்கட்சிகள் கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னரே நாடாளுமன்றத்தில் அரசுத் தரப்பு அமிலச் சோதனையை சந்திக்க வேண்டிய நேர்ந்தாலும் அதிசயம் இல்லை.

நாடாளுமன்றத்தில் ☞ 2

# ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் சகலரும் பதவி விலக வேண்டும்

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் 5 அம்சக் கோரிக்கைகள் முன்வைப்பு



கொழும்பு, ஏப்ரல் 16

கொழும்பு – காலிமுகத்திடலில் நேற்று ஏழாவது நாளாக அரச எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்த போராட்டக்காரர்கள் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

தமது ஐந்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தாம் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர். ☞ 11

## தமிழ் மக்கள் அன்றே கூறிவிட்டனர்!

### யாழில் சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு



(ந.லோகதயாளன்)

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த எவருமே அரசில் இருக்கக் கூடாது எனத் தமிழ் மக்கள் அன்றே கூறிவிட்டனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கருத்தாடல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞ 11

## போராட்டக் களம் சென்று பேராதரவு வழங்குங்கள்!

### வடக்கு, கிழக்கு இளைஞர்களிடம் சுமந்திரன் பகிரங்க வேண்டுகோள்

(ந.லோகதயாளன்)

அரசிலிருந்து அனைத்து ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களையும் பதவி விலகக் கோரி கொழும்பு – காலிமுகத்திடலில் இளைஞர்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கிலிருந்தும் இளைஞர்கள் சென்று முழுமையான ஆதரவு வழங்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்றஉறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.

நாட்டின் தற்போதைய ☞ 2

## பேராசிரியர் பாலகுமாருக்கு மருத்துவபீடத்தில் அஞ்சலி!



யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், உயிர் இரசாயனவியல் துறையின் தற்போதைய தலைவருமாகிய மறைந்த பேராசிரியர் ச.பாலகுமாருக்கு இறுதி மரியாதை செலுத்தும் வகையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தால் இறுதி அஞ்சலி ☞ 2

## போராட்டக்களத்தில் சனத் ஜயசூரியவும்!



கொழும்பு–காலிமுகத்திடலில் தொடர்ந்து ஏழாவது நாளாக நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு ☞ 2

## போராட்டத்தை ஆதரித்த பொலிஸுக்குப் பிணை!

### சட்டத்தரணிகள் பலர் தாமாகவே முன்னிலை



கொழும்பு–காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு கோட்டாபய அரசுக்கு எதிராக மக்கள் நடத்தும் எழுச்சிப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட ☞ 2

## மர்மமான முறையில் மரணித்த தந்தை, மகன்; தண்ணீர்த் தொட்டியிலிருந்து சடலங்கள் மீட்பு

தொழிற்சாலை ஒன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த 37 வயதுடைய தந்தை மற்றும் 9 வயது மகன் ஆகியோரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை குறித்த நபர்தனதுமகனுடன்தொழிற்சாலையின் பாதுகாப்பைப் பார்வையிட வந்திருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இருவரும் காலை 10.30 மணியளவில் தொழிற்சாலைக்குள் நுழைந்துள்ளதுடன் பிற்பகல் 2 மணி ஆகியும் வெளியே வராத காரணத்தால் பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளே சென்று அவதானித்தபோது தண்ணீர்த் தொட்டியில் இருந்து குறித்த இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

உயிரிழந்த குடும்பஸ்தர் இறப்பர் தொழிற்சாலையின் நிர்வாகத் தர அதிகாரியாவார்.

தொழிற்சாலைக்கு விடுமுறை அளிக்கப் ☞ 2

## நம்பிக்கையில்லாப் பிரேரணை; இ.தொ.கா. ஆதரவளிக்காதாம்

### மருதுபாண்டி எம்.பி. கூறுகின்றார்



அரசுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அரசின் பங்காளியாகவிருந்து பின்னர் இராஜாங்க அமைச்சுப் பதவியை துறந்து வெளியேறிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாக ☞ 11

## குப்பைத் தொட்டிகளில் முஸ்லிம் அரசியல்வாதிகள்



காலிமுகத்திடல்போராட்டக்களத்தில் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உருவப்படங்கள் ஒட்டப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய. சுதந்திரக் கட்சிப் பிரமுகர். சுதந்திரக் கட்சி, ஆளும் மொட்டுக் கட்சியின் கூட்டணியிலிருந்து வெளியேறி தனிக் குழுவாக இயங்கப் போகின்றது என அறிவித்தவுடன் தமது பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்ய முன் வந்தார். ஆனால் அது கட்சி ரீதியான பதவி இல்லை என்பதால், அப்படி இராஜினாமாச் செய்ய வேண்டாம் என்று கேட்டார் ஜனாதிபதி கோட்டாபய. அதனால் அந்த விடயம் அப்போது அப்படியே அடங்கிப் போயிருந்தது.

ஆனால், சியாம்பலப்பிட்டிய இப்போது இராஜினாமாச் செய்வது என்று முடிவு செய்து விட்டார். 19ஆம் திகதி – செவ்வாயன்று – நாடாளுமன்றம் கூடும் போது சியாம்பலப்பிட்டிய தமது இராஜினாமாவை சபாநாயரிடம் சமர்ப்பிப்பார் எனத் தெரிகின்றது. அப்போது பிரதி சபாநாயகர் பதவிக்கு உடனடியாக ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

அதாவது ஆளும் தரப்பும், எதிரணியும் நேரடியாக நாடாளுமன்றத்தில் வாக்குப் பலத்தை சோதிக்கும் அமிலப் பரீட்சையாக அது அமையக் கூடும்.

அதில், நேரடியாக வாக்கெடுப்பு மோதலைத் தவிர்ப்பதற்கு ஆளும் தரப்பு முடிவு செய்தால், எதிரணியுடன் சேர்ந்து இணக்கமான ஒருவரை பிரதி சபாயகராகத் தெரிவு செய்து சமாளிக்கலாம்.

அரசுக்கு எதிராக வரக் கூடிய நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னோட்டமான நாடாளுமன்ற வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படுவதை ஆளும் தரப்பு பெரும்பாலும் விரும்பாது என்று கருதப்படுகின்றது. அதனால் எல்லாத் தரப்புகளுக்கும் இணக்கமான பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தி நாடாளுமன்ற வாக்கெடுப்பைத் தவிர்க்க அது தீர்மானித்தால், இன்றைய நிலையில் அந்தப் பதவி தமிழர் தரப்புக்குக் கிட்டவும் வாய்ப்புண்டு.

இன்றைய ஆட்சி அதிகாரப் பிய்ச்சல் பிடுங்கலில் அதிகம் சம்பந்தப்படாமல் – ஒரு தரப்பாக அவ்விடயங்களில் முனைப்பாக இல்லாமல், அதேசமயம் ஆளும் தரப்பையும், எதிர்த்தரப்பையும், ஆளும் தரப்பிலிருந்து வெளியேறிய அதிருப்திக் குழுவினரையும் சமதூரத்தில் வைத்திருக்கும் – அணி என்று பார்த்தால் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான்.

நிச்சயமாக உபசபாநாயகர் பதவி என்றதும் நாடாளுமன்ற அனுபவம், திறமை போன்றவையும் கணிப்பிடப்படும்.

கூட்டமைப்பில் நீண்டகால எம்.பியாக இருப்பவர் செல்வம் அடைக்கலநாதன். முன்னர் உபசபாநாயகருக்கு அடுத்த நிலையான, குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை வகித்த அனுபவமும் கொண்டவர். ஆகவே பிரதி சபாநாயகர் பதவியை அவர் கையாள்வது அவருக்கு ஒன்றும் சிக்கலாக இருக்காது.

தவிரவும், சித்தார்த்தன், சுமந்திரன் போன்ற பிரதி சபாநாயகர் ஆசனத்தைத் கையாளும் திறமை கொண்டவர்களும் கூட்டமைப்புப் பக்கத்தில் இருக்கின்றனர்.

கூட்டமைப்பில் கலையரசனையும் சாணக்கியனையும் தவிர, மற்றைய எம்.பிக்கள் எல்லோரும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்தவர்கள்தான்.

முதலில் சியாம்பலப்பிட்டிய நேற்று வலியுறுத்திக் கூறியபடி தமது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். அதன் பின்னர் வாக்கெடுப்பைத் தவிர்த்து பொது இணக்க வேட்பாளராக ஒருவரைத் தேர்வு செய்யும் முடிவுக்கு பிரதான கட்சிகள் வர வேண்டும்.

இரண்டும் நடந்தாலும் – இந்த அரசியல் நெருக்கடி நிலைமைக்குள் பிரதி சபாநாயகர் பதவியை ஏற்கும் தீர்மானத்துக்கு தமிழர் தரப்பு வர வேண்டும்.

இவ்வளவும் நடந்தால்தான் நான் முன்னர் கூறிய எதிர்வு கூறல்களில் எதுவும் நடக்கக் கூடும்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு அடுத்தது குழுக்களின் பிரதித் தலைவர் பதவி. அதையும் சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதன்தான் வகிக்கின்றார்.

பிரதி சபாநாயகர் பதவியை ரஞ்சித் சியாம்பலப்பிட்டி இராஜினாமாச் செய்வார் என்றால், அதே காரணங்கள் அங்கஜன் இராமநாதனுக்கும் பொருந்தும். ஆனால் அவர் பக்கத்தில் இருந்து அப்படியான செய்தி இல்லை.

சு.கவினர் பலருக்கும் இது போதாத காலம். ஒருபக்கம் கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, செயலாளர் தயாசிறி ஜயசேகரா மற்றும் கட்சியின் மூத்த பிரமுகர்கள். மற்றப் பக்கம் ராஜபக்ஷக்கள். இரண்டுக்கும் நடுவில் நமக்கு ஏன் சிக்கல் என்று சு. கவின் எம்.பிக்கள் திசைக்கு ஒரு பக்கமாக நழுவி, தொடர்பு எல்லைக்கு அப்பால் இருக்கின்றனர் என்று ஒரு தகவல்.

அந்த அணியில் மஹிந்த அமரவீர சிங்கப்பூரில்; நம் அமுல் பேபி திருப்பதியில்.

இரண்டு தரப்பு இழுபறிக்கு நடுவில் ஏழுமலையான் காப்பாற்றுவான் என்று நம்பிக்கை. தனது கனவு பாழ் ஆகாமல் அமுல் பேபியை வெங்கடேசப்பெருமாள் பார்த்துக் கொண்டால் சரி....!

– மின்னல் –

## மர்மமான முறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பட்டுள்ளதால் அதன் பாதுகாப்பு குறித்து விசாரிக்க அவர் அங்கு வந்திருந்தார் எனத் தெரியவந்துள்ளது.

தொழிற்சாலைக்குத் தண்ணீர் சேமித்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட தொட்டியில் அவர்களது உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் காலி – அக்மீமன பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## குப்பைத் தொட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்து வாக்களித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ், நஸீர் அஹமட் மற்றும் பைசல் ஹாசீம் ஆகியோரின் உருவப்படங்களே இவ்வாறு குப்பைத் தொட்டிகளில் ஒட்டப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, குப்பைகளை மூடை மூடையாகக் கட்டி காலிமுகத்திடலில் வைத்துள்ள போராட்டக்காரர்கள் அந்தக் குப்பை மூடைகளுக்கு ராஜபக்ச குடும்பத்தினர் அணியும் சிவப்பு நிற சால்வையை அணிவித்துக் காட்சிப்படுத்தியுள்ளதையும் காணமுடிகின்றது.

## போராட்டக்களத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
எதிரான மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் இலங்கையின் கிரிக்கெட் ஜாம்பவானான சனத் ஜயசூரியவும் கலந்துகொண்டார்.

தொடர்ந்தும் இந்தப் போராட்டத்துக்கு நாட்டின் பல்வேறு துறைசார்ந்தவர்களும் தங்களின் ஆதரவை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போராட்டக் களம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நிலை தொடர்பில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கருத்தாடல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போராட்டக் களத்துக்கு அரசியல் கட்சிகள் வர வேண்டாம் என்று இளைஞர்கள் கூறியுள்ளனர். ஆகவே, வடக்கு, கிழக்கிருந்து இளைஞர்கள் அங்கு சென்று முழுமையான ஆதரவு வழங்க வேண்டும். எமது நிலைப்பாட்டை அங்கே தெரிவிக்க வேண்டும் – என்றார்.

## பேராசிரியர் பால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
செலுத்தும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்வு குறித்து யாழ். பல்கலைக்கழக சமூகத்தினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

12.04.2022 செவ்வாய்க்கிழமை அன்று அமரத்துவம் அடைந்த பேராசிரியர்.ச.பாலகுமாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு மருத்துவ பீட ஹூவர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பேராசிரியரின் நேயத்துக்குரிய நண்பர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், கல்விச் சமூகத்தினர், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் காலக் கனதி மிக்க இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து அமரர் பேராசிரியர் ச.பாலகுமாருக்கு இறுதிவணக்கம் செலுத்த உரிமையுடன் அழைக்கின்றோம் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

## போராட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பொலிஸ் அதிகாரி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் கோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

விடுமுறை நாளான நேற்று அவ



ருக்குச் சார்பாகச் சட்டத்தரணிகள் பலர் இலவசமாக ஆஜராகினார்கள்.

இதன்போது குறித்த பொலிஸ் அதிகாரிக்குப் பிணை வழங்கிய நீதிமன்றம், வழக்கை எதிர்வரும் 29ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்குமாறு உத்தரவிட்டது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தேவை
வெள்ளவத்தையில் இரண்டு அல்லது மூன்று அறை வீடு உறுதியுடன் வாங்குவதற்கு தேவை.
0701788354

அறிவாற்றலும் அர்ப்பணிப்பும் மிக்க கல்விமானுக்கு அஞ்சலி செலுத்த அழைக்கின்றோம்!



அமரர். பேராசிரியர். ச. பாலகுமார்
(துறைத் தலைவர், உயிர் இரசாயனவியல் துறை,முன்னாள் பீடாதிபதி மருத்துவபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

12.04.2022 செவ்வாய்க்கிழமை அன்று அமரத்துவம் அடைந்த பேராசிரியர். ச. பாலகுமார் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு மருத்துவபீட கூவர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பேராசிரியரின் நேயத்துக்குரிய நண்பர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், கல்விச் சமூகத்தினர், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் காலக்கனதி மிக்க இவ் அஞ்சலி நிகழ்வில் கலந்து அமரர் பேராசிரியர் ச.பாலகுமாருக்கு இறுதிவணக்கம் செலுத்த உரிமையுடன் அழைக்கின்றோம்.

நன்றி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர்



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# நீதியான போராட்டம்?

கோட்டாவை வீட்டுக்குப் போகச் சொல்லியும், அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரியும் கொழும்பு காலி முகத்திடலை ஒட்டி நடத்தப்பட்டு வரும் மக்கள் போராட்டம் சூடு பிடித்திருக்கின்றது. சளைக்காமல் மக்கள் – குறிப்பாக இளைஞர்கள் – அங்கு திரண்டு வருகின்றார்கள்.

அது ஒரு மக்கள் எழுச்சியாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் அது உண்மையான, நேர்மையான, மக்கள் கருத்தியலை வெளிப்படையாகப் பிரதிபலிக்கின்றதா? அது நீதியான போராட்டமா? – என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

2019 நவம்பரில் இதே கோட்டாபய ராஜபக்ஷவை 69 லட்சம் வாக்குகளை அள்ளிக் கொட்டி ஜனாதிபதியாக்கியவர்கள் இந்த நாட்டு மக்கள்தான். அந்தத் தெரிவு நடந்து இன்னும் இரண்டரை ஆண்டுகள் கூடக் கடக்கவில்லை. அந்தத் தெரிவு முடிந்து ஒன்பது மாதங்களின் பின்னர், அந்தத் தெரிவை ஊர்ஜிதப்படுத்தி, பலப்படுத்துமாற் போல பொதுத் தேர்தலில் அவரின் அணிக்கு மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற ஆசனங்கள் என்ற சரித்திரப் பெரு வெற்றியை அளித்தவர்களும் அதே நாட்டு மக்கள்தான். அந்த நாடாளுமன்ற வாக்களிப்பு நடைபெற்று இன்னும் இரண்டு வருடங்கள் கூட முடியவில்லை.

அதற்குள் இந்தப் போராட்டம். அதன் அர்த்தம் என்ன?

உண்மையில், கொழும்பு காலி முகத்திடலில் நடைபெறும் போராட்டம் இலங்கை மக்களின் ஒட்டுமொத்த – அல்லது பெரும்பான்மை எண்ணிக்கையானோரின் – கருத்தியலாக இருக்கும் என்றால் அவர்கள் என்ன சொல்ல வருகின்றார்கள்? 2019 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலிலும், 2020 ஒகஸ்ட் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலிலும் நாம் தவறிழைத்து விட்டோம். நாம் இப்போது அதைத் திருத்த விழைகிறோம் என்பதுதானே அந்தச் செய்தி?

தனது தவறை உண்மையாக ஏற்று ஒப்புக் கொள்பவனுக்கு அதைத் திருத்துவதற்கு முழு உரிமையும் நியாயப்பாடும் உண்டு. ஜனாதிபதித் தெரிவில் தவறிழைத்தவர்கள் என்று கருதும் மக்கள் இப்போது அதைத் திருத்த முயல்வதற்கு முழு உரிமையுண்டு. ஆனால் முன்னர் தாம் இழைத்தது தவறு என்பதை அவர்கள் நீதி, நியாயம், உண்மையின் அடிப்படையில் ஏற்றுக் கொண்டால்தான் அதைத் திருத்துவதற்கான தார்மீக உரிமை – நியாயம் – அவர்களுக்குக் கிட்டும்.

இப்போது வந்து, ராஜபக்ஷக்கள் குடும்ப ஆட்சி, நாட்டைச் சூறையாடி விட்டார்கள் என்றெல்லாம் காலி முகத்திடலில் கூக்குரலிடுபவர்களிடம், தேர்தலுக்கு ராஜபக்ஷக்கள் நின்ற போது இப்படி எல்லாம் ராஜபக்ஷக்கள் வென்று வந்து செய்வார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா என்று ஒரு கேள்வியைக் கேட்டுப் பாருங்கள்.

2005 முதல் 2015 வரையான ராஜபக்ஷக்களின் முதலாவது இருண்ட ஆட்சிக்காலத்திலும் இவற்றை எல்லாம் அவர்கள் செய்தார்கள். மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும் அதையே ராஜபக்ஷக்கள் செய்வார்கள் என்று தெரிந்து கொண்டுதான் இன்று அவர்களுக்கு எதிராகப் போராடும் இந்தத் தென்னிலங்கை மக்கள் கடந்த இரண்டு தேர்தல்களிலும் அள்ளிக் கொட்டி வாக்களித்தார்கள். ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சியும் சூறையாடலும் அப்போது அவர்களுக்கு ஒரு பொருட்டாகப் படவில்லை. அதை விட ராஜபக்ஷக்கள் கிளப்பிய பௌத்த – சிங்களப் பேரினவாத வெறி தென்னிலங்கையரை உசுப்பேற்றியது. அதற்கு இடமளித்து, தங்களுக்கும் சேர்த்து அப்போது மண் அள்ளிப் போட்டார்கள் அவர்கள். இப்போது ராஜபக்ஷக்களின் அராஜகம் நேரடியாகத் தங்கள் பொக்கட்டைச் சூறையாடி, அள்ளிக் கொண்டு போகின்றது என்பதை உணரும் போதுதான் கொதிக்க முற்படுகின்றார்கள்.

உண்மையில் இது, தவறை உணர்ந்து, திருத்தும் – திருந்தும் – முயற்சியல்ல; தமது தவறால் தமக்கு ஏற்பட்ட பாதிப்பிலிருந்து தப்பிப் பிழைக்கும் சுயநல முயற்சி.

பேரினவாதக் காட்டுக் கூச்சல் வெறிக்கு எடுபட்டுப் பெரும் தவறிழைத்தோம், அதைத் திருத்த முற்படுகின்றோம் என்ற உண்மையை ஒப்புக் கொள்ளாத வரை காலி முகத்திடல் போராட்டம் நீதி, நியாயமானதாக – உண்மையானதாக – அமையப் போவதில்லை.

# நாட்டைப் பேரழிவிற்கு இழுத்துச் சென்றோர் உரிய முறையில் தண்டிக்கப்படுவது கட்டாயம்

## கலாநிதி ஹர்ஷ டி சில்வா எம்.பி. வற்புறுத்து



வெளிநாட்டுக் கடனைச் செலுத்தும் திறன் இலங்கைக்கு இல்லை எனவும், அது இடைநிறுத்தப்படும் எனவும் நிதியமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இப்போது எங்களால் எதுவும் செய்ய முடியாததால் இந்த முடிவை எடுத்துள்ளோம். எனவே இலங்கை வரலாற்றில் மற்றுமொரு இருண்ட நாள் உருவாகியுள்ளது. நாம் கூறியதை அன்றே கேட்டிருந்தால் இவ்வளவு பேரழிவு ஏற்பட்டிருக்காது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எமது நாட்டு மக்களும் வர்த்தகர்களும் எதிர்காலத்தில் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். டொலர்களை மக்கள் நலனுக்காக பயன்படுத்த வேண்டும் என்ற முடிவு நல்ல முடிவுதான்.

இதை முதலிலேயே நாம் எடுத்துக் கூறினோம். அரசாங்கம் எடுக்கும் தீர்மானம் தவறு, அவ்வாறு, பயணிக்க முடியாது என்றோம். எனவே சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று விவாதிக்குமாறு கேட்டுக் கொண்டேன்.

சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்லும் போது சர்வதேச அளவில் நமக்குக் கிடைக்கும் நம்பிக்கையைப் பற்றி சிந்திக்கிறோம். அத்தகைய நம்பிக்கையை நாம் கட்டியெழுப்பியிருந்தால், நிதிச் சந்தைகளில் இருந்து கடன் வாங்க முடிந்திருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த நடவடிக்கைகளை முதலில் எடுத்திருந்தால் இவ்வாறு கடன்கள் நிறுத்தப்பட்டிருக்கா.

பிரச்சினை பெரிதானபோது, ‘கடனை இப்போது கட்ட முடியாது, மக்கள் வரிசையில் நிற்காமல் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்’ என்றோம். அதனையும் கேட்கவில்லை. இறுதியாக என்ன நடந்தது, கடனை அடைக்க பணத்தை செலுத்தியதால் இறுதியாக மக்கள் வரிசையில் நிற்கும் நிலைமையே ஏற்பட்டது. முடிவில் என்ன நடந்தது? கடனையும் நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று.

அப்போது சுமார் 550 கோடி டொலர் அந்நிய செலாவணிக் கையிருப்பு அழிக்கப்பட்டுள்ளது. – எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், இலங்கையை இந்தப் பேரழிவிற்கு இழுத்துச் சென்றவர்கள் உரிய முறையில் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். – எனவும் அவர் கூறியுள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளரின் மற்றொரு நாடகம்

## அருட்தந்தை சிறில் காமினி அடிகள் கருத்து



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்ணவினால் வெளியிடப்பட்ட கருத்தானது மற்றுமொரு நாடகமாகும்.

இது சிறுபிள்ளைத் தனமான விடயம் எனக் கத்தோலிக்கத் திருச்சபையின் ஞானர்த்த பிரதீப்பய பத்திரிகையின் ஆசிரியரான அருட்தந்தை சிறில் காமினி அடிகள் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்ணவினால் வெளியிடப்பட்ட கருத்தானது மற்றுமொரு நாடகமாகும். இது சிறுபிள்ளைத் தனமான விடயமாகும் என கத்தோலிக்கத் திருச்சபையின் ஞானர்த்த பிரதீப்பய பத்திரிகையின் ஆசிரியரான அருட் தந்தை சிறில் காமினி அடிகள் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்புச் செயலாளரான கமல் குணரட்ண பொதுமக்களின் வரி மூலம் சம்பளம் பெறும் அரச சேவையாளர். பொது மக்களை பாதுகாப்பதே அவரின் வேலையே தவிர, அரசியல் தலைவர்களை அல்ல என்றார் அவர்

கடந்த 12 ஆம் திகதியன்று அவரின் தலைமையில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பின்போது, பாதுகாப்புச் செயலாளரிடம் கத்தோலிக்க திருச்சபை 20 கேள்விகளை முன்வைத்துள்ளதுடன், அந்த 20 கேள்விகளுக்குமான பதிலை கத்தோலிக்க திருச்சபை எதிர்பார்த்திருப்பதாகவும் அருட் தந்தை சிறில் காமினி குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் நடைபெற்று 3 ஆண்டுகள் ஆகின்றன. ஆயினும் இதுவரை குற்றவாளி யார் என்பதையும், அதற்கு பின்புலமாக யார் இருந்தார்கள் என்பதையும் கண்டுபிடிப்பதற்கு பாதுகாப்புத் துறை தவறியுள்ளது. உண்மையில், தற்போது பெரும் பொருளாதார நெருக்கடி மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக வரிசைகளிலும், போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றமையால், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஊடக சந்திப்புக்களை நடத்தாமல் இருந்து வந்தோம்.

எனினும், நாட்டின் பாதுகாப்புச் செயலாளரான கமல் குணரட்ண தலைமையில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரட்ண, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் ஜகத் டயஸ் ஆகயோரின் பங்குபற்றுதலுடன் கடந்த செவ்வாயன்று உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பான ஊடக சந்திப்பு நடத்தப்பட்டிருந்தது. இதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அவரிடம் நாம் 20 கேள்விகளை முன்வைக்கிறோம். அவை தொடர்பில் தெளிவான பதிலை எமக்கு தருமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

# நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி ஆனால் அதனை சாதகமாக மாற்றலாம்



## வழிவகை கூறுகிறார் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன

நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலை ஒன்று உருவாகியுள்ள போதிலும், அதனை சாதகமாக மாற்றவும் நாட்டில் புதிய அரசமைப்பை உருவாக்கி, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கி, அரசியல் தீர்வுகளை பெற்றுக்கொள்ளவும் இதுவே மிகச் சரியான சந்தர்ப்பமாகும். ஆகவே நெருக்கடிக்கு மத்தியிலும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையைக் குறைத்து, பொருளாதார மற்றும் சர்வதேச விவகாரங்களைக் கையாளக்கூடிய நிபுணர்களை கொண்ட குழுவொன்றை அமைத்து, அமைச்சரவையுடன் இணைத்து, இன்றைய நிலைமைகளைக் கையாள வேண்டும்.

அதுவே இன்றைய நிலைமைகளில் இருந்து மீள இருக்கும் சிறந்த வேலைத்திட்டமாகும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை தீர்க்க இப்போதும் எம்மிடம் மாற்று வேலைத்திட்டங்கள் உள்ளன. அவற்றை கையாளத் தாமதிக்கக்கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒன்றில் ராஜபக்ஷவினர் சுயமாக ஆட்சியை விட்டு வெளியேறினால் அடுத்ததாக என்ன செய்வது என்பது குறித்து ஆராய்ந்து புதிய பயணம் ஒன்றினை முன்னெடுக்க முடியும். அல்லது நாடாளுமன்றத்தில் இதனைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

எதிர்க்கட்சிகள் மற்றும் சுயாதீன அணியினர் இணைந்து அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர வேண்டும். அதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவது இலகுவான காரியம் அல்ல.

அதற்கு நீண்ட காலம் எடுக்கும். குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவரப்பட்டால் அரைவாசிப்பேர் கையொப்பமிட வேண்டும் அல்லது மூன்றில் ஒரு தரப்பு கையொப்பமிட்டால் கொண்டுவரப்பட்ட குற்றப் பிரேரணையில் உள்ள குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை என்பதை சபாநாயகர் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோல் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பவும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அவசியமாகும். அதுமட்டுமல்ல ஜனாதிபதி தெரிந்தே அரசமைப்பை மீறியுள்ளார், அல்லது அரசமைப்பிற்கு முரணாக செயற்பட்டுள்ளார் என நீதிமன்றமும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அல்லது ஒரு சில பலவீனம் காரணமாக ஜனாதிபதியினால் தொடர்ந்தும் பதவியில் இருக்க முடியாது என நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே இவை இலகுவாக செய்து முடிக்க முடிந்த விடயங்கள் அல்ல.

எனவே நாட்டின் பொதுவான கோரிக்கைக்கு செவிமடுத்து மக்களின் ஆணை என்ன என்பதை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டோர் தாமாகப் பதவி விலக வேண்டும். அரசாங்கமும் பலமிழந்துவிட்டது.

சர்வதேசத்தின் நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது. மக்கள் அதிருப்தியில் உள்ளனர். ஆகவே பலமிழந்த அரசாங்கத்துடன் இனியும் எவரும் கலந்துரையாட மாட்டார்கள். எனவே இருக்கும் சிறந்த தெரிவு என்னவென்றால் அரசாங்கம் முழுமையாக பதவி விலக வேண்டும்.

மாற்று அரசாங்கம் ஒன்றைத் தற்காலிகமாக உருவாக்கி குறுகிய அமைச்சரவையை உருவாக்கி, நிபுணர்களுடன் இணைந்து இயங்கக்கூடிய பொறிமுறை ஒன்றை உருவாக்கிப் பயணிக்க வேண்டும்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி, பொறுப்புக்கூறல் விடயங்கள், நல்லிணக்க விடயங்கள், ஜனநாயகத்தை பலப்படுத்தும் விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதே இன்றைய நெருக்கடியை தீர்க்க இருக்கும் தெரிவாகும். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கிளையை முற்றுகையிடப் பொதுமக்கள் முயற்சி!

மட்டக்களப்பு பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன கிளையை நேற்று பொதுமக்கள் முற்றுகையிட முயற்சித்த வேளையில், அதனை பொலிஸார் தடுத்தபோது அப்பகுதியில் பதற்ற நிலைமையேற்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மக்களும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நேற்றைய தினம் மட்டக்களப்பில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள்கள் வழங்கப்படாது என்று வெளியான அநாமதேய தகவல்களையடுத்து பெருமளவானோர் மட்டக்களப்பு பார் வீதியில் உள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினை முற்றுகையிட முற்பட்டனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டின்கீழ்கொண்டுவந்தமையுடன் அங்கிருந்தவர்களை கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தல்களை வழங்கினர்

# சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி

## வாகரையில் நேற்றுமுன்தினம்







(க.கிருபாகரன்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, வடக்கு கிழக்கு முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கு.வி.லவக்குமார் தலைமையில் வாகரை அம்பந்தனாவெளியில் பாரம்பரிய கிராமிய விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது ஆண், பெண் இருபாலாருக்குமான தோணியோட்டம், கிடுகு பின்னுதல், கயிறு இழுத்தல், சாய முட்டி உடைத்தல், ஓட்டப்போட்டி ஆகியன இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அதிதிகளாக சிவகுரு ஆதின முதல்வரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்க இணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள், தென் கயிலை ஆதின முதல்வர் அகத்தியர் அடிகளார் மற்றும் திருமூலர் தம்பிரான் சுவாமிகள், அருட்தந்தை கே.ஜெகதாஸ், அருட்தந்தை எஸ்.பிரின்ஸன் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கி வைத்தனர்.

# புத்தாண்டன்று ஊறணியில் காட்டு யானை அட்டகாசம்

(காரைதீவு நிருபர் சகா)

புத்தாண்டன்று இரவு பொத்துவில் ஊறணி கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைபெரும் அட்டகாசம் புரிந்துள்ளது.

அந்த யானையின் ஒருமணி நேர அட்டகாசத்தில் இரண்டு கடைகளும் ஒரு வீடும் சேதமாக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள பொத்துவில் பிரதேச சபையின் உப தவிசாளர் பெருமாள் பார்த்திபன் தகவல் தருகையில் யானையின் அட்டகாசத்தால் சுமார் 10 லட்சம் ரூபாவுக்கும் மேலான சேதம் ஊறணியில் ஏற்பட்டுள்ளது, அரசு அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



# வீதி விபத்துகள் அதிகரிப்பு

கடந்த சில தினங்களில் திடீர் விபத்துக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காணக்கூடியதாக இருப்பதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கொழும்பு தேசிய வைத்தியசாலை, தாதி பயிற்சிப்பிரிவின் தாதி அதிகாரி புஷ்பா ரமனி டி சொய்சா தெரிவிக்கையில், பண்டிகைக் காலத்தில் ஏற்படக்கூடிய இவ்வாறான விபத்துக்களை குறைத்துக் கொள்வதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரினார்.

வீதியில் செல்லும் போது வீதி ஒழுங்குவிதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுவதன் மூலம் விபத்துக்களை குறைத்துக்கொள்ள முடியும்.

மதுபாவனையினாலும் பாரிய அனர்த்தங்கள் இடம்பெறுகின்றன.

திடீர்விபத்துக்களில் 85 வீதமானவை தனிநபர்களின் செயற்பாடுகளினால் இடம்பெறுகின்றன.– என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, வீதி விபத்துக்களினால் பாதிக்கப்பட்ட 167 பேர் பண்டிகைக் காலத்தில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில், சிகிச்சை பெற்றுள்ளனர் என சுகாதார அமைச்சின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் இந்திக்க ஜாகொகொட தெரிவித்துள்ளார்.

இவர்களுள் 118 பேர் ஆண்கள். 85 பேர் பெண்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்கள் பேரம் பேச வேண்டிய முக்கிய தருணம் வந்துள்ளதாம்!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பில் தெரிவிப்பு






பொது வாக்கெடுப்பு அல்லது தமிழர்களின் சுதந்திர ஆட்சிக்கான பேரம் பேசலை முன்னெடுக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளதாக வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று முன்தினம் 1881 ஆவது நாளாகவும் வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் வருடப்பிறப்பினை ஒட்டி ஏற்பாடு செய்திருந்த கவனவீர்ப்பு போராட்டத்தின்போதே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

கொழும்பில் உள்ள தமிழ் இளைஞர்கள், சிங்கள இளைஞர்களின் புரட்சியின் மீது கொண்ட காதல், தமிழர்களுக்கு எந்த விடிவையும் கொண்டு வராது. அது தமிழர்களின் துன்பங்களை ஒழிக்காது, ஒற்றையாட்சியை மேலும் வலுப்படுத்தும். கொழும்பில் ஒற்றுமை என்ற பெயரில், இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்களில் இருந்து விடுபடுவதற்கு சிங்கள சிந்தனைக் குழுவின் உத்தியாக கூட இது இருக்கலாம்.

வடக்கு, கிழக்கில் எந்தவொரு தமிழர்களும் அரசாங்கத்திற்கு எதிராக பொருளாதார ஆர்ப்பாட்டம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை இன்று பலவீனமாக உள்ளது. உணவு இல்லை, பணம் இல்லை, பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகள் முடங்கியுள்ளன. இது மற்ற நாடுகளுக்கு சந்தைப்பங்கை இழக்கிறது. இலங்கையால் வெளிநாட்டு கடனை செலுத்த முடியவில்லை. இலங்கையின் எதிர்காலம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற பணக்கார நாடுகளில் தங்கியுள்ளது.

எனவே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியனுடன் பொது வாக்கெடுப்பு அல்லது சுதந்திர ஆட்சிக்கான பேரம் பேசலை முன்னெடுக்கவேண்டும். வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி இந்த நாடுகளிடம் கேட்க வேண்டும். தமிழர்களுக்கான நிரந்தரத்தீர்வை எட்டுவதற்கு, இந்த நாடுகள் இலங்கையுடன் பேரம்பேச இதுவே சிறந்த தருணம் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

அல்லது அவர்களின் எம்.பி. பதவிகளை இராஜினாமா செய்வதற்கான கிளர்ச்சியை முன்னெடுத்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவுடன் தமிழர்கள் சார்பில் வாதாடக் கூடிய சில புதிய துணிச்சலான இளைஞர்களை கொண்டுவர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# வரிசையிலும், போராட்டத்திலும் நிற்பதுதான் மக்களுக்கு அரசு வழங்கிய புத்தாண்டுப் பரிசு

## விசனம் தெரிவிக்கிறார் இராதாகிருஷ்ணன் எம்.பி.




புத்தாண்டைக் கொண்டாட வேண்டிய பொது மக்கள் இன்று வீதி ஓரங்களில் அத்தியாவசிய பொருள்களுக்காக வரிசையில் நிற்கின்ற நிலைமையும், போராட்டங்களில் ஈடுபடுகின்ற சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கின்றன. இதுவே இந்த அரசாங்கம் இந்த நாட்டு மக்களுக்கு கொடுத்த புத்தாண்டுப் பரிசாகும்.

மேலும், இந்த சூழ்நிலைக்கு காரணம் கடந்த இரண்டு வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பிழையான பொருளாதார கொள்கையாகும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புதுவருடத் தினத்தன்று நுவரெலியாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையினுடைய பொருளாதார பின்னடைவுக்கு முக்கிய காரணம் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக எதிர்க்கட்சிகள் கூறிய விடயங்களை பொருட்படுத்தாமல் அரசு தன்னிச்சையாகச் செயல்பட்டமையே.

நாங்கள் தொடர்ச்சியாக சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சில் ஈடுபடுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினோம்.

மீள் செலுத்த வேண்டிய கடன்களை செலுத்துவதை நிறுத்தி சம்பந்தப்பட்டவர்களோடு பேச்சு நடத்தி தவணைக் கட்டணக் காலத்தை நீடிக்குமாறு கோரிக்கை முன்வைத்தோம். ஆனால் இந்தளந்தவொரு கருத்தையும் ஏற்றுக்கொள்ளாத அரசாங்கமும், அதிகாரிகளும் செயல்பட்டதன் காரணமாக அதன் விளைவை இன்று மக்கள் எதிர்நோக்கியிருக்கின்றார்கள்.

இதற்கு முக்கிய காரணமாக இருந்தது மத்திய வங்கி ஆளுநர்களாக செயல்பட்டவர்கள் முழுக்க முழுக்க நூறு – வீதம் அரசியல் மயப்பட்டுச் செயல்பட்டமைதான். அவர்கள் சரியான தீர்மானங்களை சரியான நேரத்தில் எடுக்க தவறிவிட்டார்கள். ஒரு நாட்டில் ஜனநாயகச் செயல்பாட்டில் நாடாளுமன்றம், நீதித்துறை என்பன முக்கியத்துவம் பெறுவது போல, மத்திய வங்கியும் சுயாதீனமாக செயல்பட வேண்டிய ஓர் அமைப்பு. ஆனால் அதை அரசியல் மயமாக்கியதன் காரணமாக இன்று இந்தப் பொருளாதார பின்னடைவை நாம் சந்தித்திருக்கின்றோம்.

அளவுக்கு அதிகமாக பணம் அச்சிடப்பட்டதால் இன்று எங்களுடைய ரூபாவின் பெறுமதி நாளுக்கு நாள் வலுவிழந்து வருகின்றது. எனவே இன்றைய மோசமான சூழ்நிலையை கருத்திற் கொண்டு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவை சுதந்திரமாகவும் சுயாதீமாகவும் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்துத் தரப்பினரும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவர் திறமையான சிறந்த அனுபவத்தைக் கொண்ட ஒருவர். எனவே அவருடைய கருத்துக்களை செவிமடுத்து முன்னோக்கிச் சென்றால் மாத்திரமே எங்களுடைய இலங்கை பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

எதிர்வரும் காலத்தில் இந்த நாட்டில் பிரதமராக வரக்கூடியவர் மதத்தை முன்நிலைப்படுத்தாது மக்களை முன்நிலைப்படுத்தி செயல்படுகின்ற ஒருவராக இருக்க வேண்டும். – என்றார்.

# இனவாதம் பரப்பப்பட்ட நாட்டில் இன ஐக்கியம் தோன்றியுள்ளது!

## பழனி திகாம்பரம் எம்.பி. வரவேற்கின்றார்

சுயநல அரசியல் காரணங்களுக்காக மக்கள் மத்தியில் தூவப்பட்ட இனவாதக் கருத்துகள் எடுபடாமல் ஒரே நோக்கத்தில் நாட்டின் சுபீட்சத்துக்காக மூவின மக்களும் ஒற்றுமையோடு போராடுகின்ற நிலைமை உருவாகியுள்ளமை இந்தத் தமிழ் – சிங்களப் புத்தாண்டில் மகிழ்ச்சி தரும் விடயமாகும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தமது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தமது செய்தியில் –

இந்த நாட்டில் இனவாதத்தை வைத்து அரசியல் குளிர்காய்ந்த நிலைமை மாற்றம் அடைந்து தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி ஒன்றுபட்டு போராடும் சந்தர்ப்பம் இயல்பாகவே தோன்றியுள்ளது. இனவாதத்துக்கு சாவு மணி அடிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் நாடு சுபீட்சம் காண வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லாமல் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒற்றுமை எதிர்காலத்தில் கட்டிக் காக்கப்பட வேண்டும். பிரித்து வைத்து அரசியல் செய்வோருக்கு எதிர்காலத்தில் இடம் தரக் கூடாது.

நல்லது செய்தால் கைதட்டி வரவேற்கும் மக்கள் அநியாயம் நேரும் போது தட்டிக் கேட்கத் தயங்க மாட்டார்கள் என்பதை அண்மைக் கால சம்பவங்கள் எடுத்துக் காட்டியுள்ளன. மக்களை ஏமாற்றி அவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக் குறியாக்க முயற்சிப்போருக்கு தகுந்த பாடத்தைப் புகட்டுவார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டுக்கு முன்னர் அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றத்தால் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள எழுச்சியும், வேகமும் எதிர்காலத்தில் அர்த்தமுள்ள அரசியலுக்கு உந்து சக்தியாக அமைய வேண்டும்.

அந்த வகையில் மலரும் புத்தாண்டு நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் மிக்கதாகவும், சீர்குலைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்தும் சக்தி உள்ளதாகவும், புதிய மாற்றத்துக்கு அடித்தளம் இடுவதாகவும் அமைய மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். – என்றும் குறிப்பிட்டுள்ளார்.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** தமிழ்நாட்டு பாரதீய ஜனதாக் கட்சியைப் பாராட்டுவதுபோல் எழுதியிருக்கிறீர்கள். மதச்சார்பற்ற நாடாக இருந்த இந்தியாவை, இந்து சாம்ராச்சியமாக மாற்ற முனையும் அதன் செயலைக் கண்டிக்கமாட்டீர்களா?

**பதில்:-** மதச்சார்பற்ற இந்தியாவை நான் வரவேற்கிறேன். அந்நாடு அப்படி இயங்குவது நல்லதுதான். பல இனங்கள் விரிந்து வாழத் தொடங்கிவிட்ட இன்றைய உலகில், இந்தியா மட்டும் என்றில்லை எந்த நாடும் மதச்சார்பற்று இயங்குவது சிறந்ததே. இந்தியா எல்லா மதத்தாரையும் பாரபட்சமின்றி அணைத்துக் கொள்ளும்ஒருநாடாக இருந்தால், அது பெருமை கொள்ளும் என்பதில் சந்தேகத்திற்கு இடமேயில்லை.

அதேநேரத்தில் மற்றொன்றையும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். காலாகாலமாக எத்தனையோ இந்துமத ஞானிகளும் தீர்க்கதரிசிகளும் தத்துவவாதிகளும் தோன்றி வளர்த்தெடுத்த மண்தான் இந்தியா. அதனால் அன்று தொட்டு இன்றுவரை இந்துமதத்தின் தளமாக அது திகழும் உண்மையையும் நாம் மறக்கவோ, மறுக்கவோ கூடாது!

இந்துமதத்தினுடைய சகிப்புத் தன்மைதான், இந்தியாவில் மாற்று மதங்களை வளரச் செய்தது. அந்த நன்றியை பின் வந்த மதத்தவர்கள் மறக்காமல் இருக்க வேண்டும் என்பதும் அவசியம் என்று கருதுகிறேன்.

மேற்குலகில், புதிய மதம் பரப்ப நினைத்த இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றார்கள். புதிய புரட்சிக் கருத்தை விதைக்க நினைத்த ‘சோக்கிறட்டீஸை’ நஞ்சூட்டிக் கொன்றார்கள். பூமி தட்டையானது என்ற பிழையான தம் கருத்துக்கு மாறாக, பூமி உருண்டையானது என்ற உண்மையைச் சொன்ன அறிஞனை அவர்கள் தீயிட்டுக் கொழுத்தினார்கள். இதுதான் மேற்குலகப் பண்பாடு.

இந்தியாவில் நம் இந்து மதத்தார் புதிதாய் வந்த மதங்களுக்கும் அவர்தம் கருத்துக்களுக்கும் தாராளமாய் இடங்கொடுத்தார்கள். மாற்று மதக் கொள்கைகளை மறுத்தார்களே தவிர, வெறுத்தார்கள் இல்லை. அதனால்த்தான் மற்றைய சமயங்கள் இந்தியாவில் நிலைகொள்ள முடிந்தன. தமது மதக் கொள்கைகளின் மீதான அசைக்கமுடியாத நம்பிக்கையே இந்துமதத்தாரின் இந்த விரிந்த மன நிலைக்குக் காரணமாயிற்று. ஒட்டகத்திற்கு இடங்கொடுக்க அது கொட்டகையைப் பிரித்த கதையாய், பின் வந்த வேற்று மதத்தவர்கள் இன்று இந்துமதத்தின் வேரை இங்கு அசைக்க நினைப்பது சகிக்க முடியாத ஒன்று என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

இந்த உண்மையை உணர்ந்து, இந்தியாவில் இந்து மதத்தின் தலைமைத் தன்மையை மாற்று மதத்தவர்கள் ஒத்துக் கொண்டே ஆகவேண்டும். அப்படியல்லாமல், வந்தவர்கள்தான் தாம் என்பதை மறந்து, அவர்கள் எல்லை கடந்து ஆட்டம் போட நினைத்தால் அதைச் சகிப்பது எப்படி?

சுதந்திரத்திற்குப் பின்னாக வந்த இந்திய அரசுகள் பலவும், உலக ஈர்ப்புக்காய் மதச்சமரசம் பேசத் தலைப்பட்டு, இந்தியாவில் இந்துமதத்தின் தலைமைத் தன்மையை சிதைத்தன. நம் தமிழ் நாட்டிலும் நாத்திகக் கொள்கை கொண்ட திராவிடக் கழகங்களின் வருகைக்குப் பின்னால் அம்மண்ணின் தாய்மதமான இந்துமதம்தான் அவர்களால் பெரிதாக இழிவு செய்யப்பட்டது. கடவுள் மறுப்புக் கொள்கை என்று சொன்ன அவர்கள் அதில்தானும் நேர்மை காட்டவில்லை. அவர்களது கடவுள் மறுப்புக் கொள்கை என்பது, உண்மையில் இந்துமதக் கடவுள் மறுப்புக் கொள்கையாகத்தான் அன்று தொட்டு இன்று வரை இருந்து வருகிறது.

தமிழ்நாட்டுத் தலைவர்கள், ரம்ழானின் போது, தொப்பி போட்டுக் கொண்டு போய் மசூதியில் கஞ்சி குடிக்கிறார்கள். கிறிஸ்மஸ்’க்கு சேர்ச்சுக்குச் சென்று கேக் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். ஆனால் இந்துமத விசேடங்களில் மட்டும் அவர்கள் பெரும்பாலும் கலந்துகொள்வதில்லை. எப்போதாவது அவர்களின் மனைவிமார்கள் தான் அங்கு சென்று வருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அறநிலையத்துறை என்ற பெயரில் இந்துமத ஆலயங்களை மட்டும் கைவயப்படுத்தி அதன் சொத்துக்களையும் உறுஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தலைவர்களின் பொய்மைக் கொள்கையின் மீது ஏற்பட்டிருக்கும் வெறுப்புத்தான், இன்று பாரதீயஜனதாவின் வேருக்கிடும் உரமாக மாறியிருக்கிறது.

இதனால்தான், இந்தியமண் இந்து மண்தான் எனச்சொல்லி, அதே நேரத்தில் அனைத்து மதங்களையும் பேண நினைக்கும் பாரதீயஜனதாவின் மேல் எனக்கு மதிப்பு உண்டாகிறது. ஆனால் அவர்களிலும் சிலர் இந்துமதத் தீவிரவாதிகளாய் மாற நினைக்கிறார்கள். அதில் எனக்கு கிஞ்சித்தும் உடன்பாடில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘சூப்பர்’ வாரிதியார் உண்மையை உடைத்துச் சொல்லியிருக்கிறாருங்கோவ்!**

**2. கேள்வி:-** ஜனாதிபதி கோட்டாபயாவுக்கு 69 லட்சம் பேர் ஆணை வழங்கியுள்ளனர். எனவே அவர் பதவியைவிட்டு விலகவேண்டிய தேவையில்லை என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



அறிவித்திருக்கிறாரே. பார்த்தீர்களா?

**பதில்:-** கொரோனா வந்தால் மூக்கில் வாசமும் வாயில் சுவையும் போய்விடும் என்கிறார்கள். இலங்கையில் இப்போது புதிய வகைக் கொரோனாக் கிருமிகள் ஏதும்வந்திருக்கிறதோஎனஐயப்படவேண்டி இருக்கிறது. அப்படி வந்திருக்கக்கூடிய கிருமிகளால் முன்பு, வாசனையும் சுவையும் போனதுபோல இப்போது கட்புலனும் செவிப்புலனும் போகிறதோ எனவும் ஐயப்படவேண்டியிருக்கிறது.

ஏனென்றால் ஜனாதிபதிக்கு எதிராகக் கொந்தளிக்கும் கிளர்ச்சியாளர்களின் கூட்டமும், அவர்களிடமிருந்து எழும் ‘கோட்டா கோ’ என்ற சத்தமும்தான் இலங்கை முழுவதும் இன்று ஒலித்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய கூட்டமும் சத்தமும் அமைச்சர் பெர்னாண்டோவின் கண்ணிலும் காதிலும் விழாத படியால்த்தான் மேற்படி ஐயம் எனக்கு வருகிறது.

பாவம்! பெர்னாண்டோ, நிகழ்காலத்தை மறந்து இன்னும் இறந்தகாலத்திலேயே அவர் இருக்கிறார் போல.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ சாமி இறங்கினாலும் பந்தம் பிடிக்கிறவன் இறங்கமாட்டான் போல. ஹி..ஹி..**

**3. கேள்வி:-** தற்போதைய நிலையில் இலங்கைத் தமிழர்களுக்குப் பாதிப்பு வராமல் துணை புரியப் போகிறார் என வெளிவந்த, தமிழக முதலமைச்சரின் அறிவிப்புக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், இன்று இலங்கை மக்கள் முழுப்பேரும்பாதிப்புற்றிருக்கும்நிலையில் தமிழர்களுக்கென தனியே உதவுவது இலங்கை மக்களுக்கிடையே பிளவை உருவாக்கிவிடும், ஆதலால் இலங்கை மக்கள் அனைவருக்குமாக உதவி வழங்க வேண்டுமெனக் கோரி இருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** ஈழத்தமிழர்களுக்குத் தலைமையேற்கத் தாம் தகுதி உடையவர்கள் என்பதை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நிரூபித்திருக்கிறார்கள். அந்தச் செய்தியைப் படித்து உண்மையில் பெருமைப் பட்டேன். ‘இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்’ என்ற வள்ளுவரின் குறள்நெறியே, ஈழத் தமிழர்களின் வாழ்வுநெறி என்பதை அவர்கள் நிமிர்வோடு உலகிற்குக் காட்டியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்கள் மீதான நன்மதிப்பு இவர்களின் கோரிக்கையால் மலையளவு உயரும் என்பது திண்ணம். அதே நேரத்தில் ஒன்றைச் சொல்லவும் வேண்டும். இன்றைய உலகு விளம்பர உலகு. மேற்சொல்லப் பட்ட செய்தி சிங்கள மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது என்பது பற்றி எனக்கு ஓர் ஐயம் இருக்கிறது. உடனடியாக இந்தச் செய்தியைச் சிங்கள மக்கள் மத்தியில் நாம் விரிவாகப் பரவச் செய்யவேண்டும் அப்போதுதான், தமிழ்மக்கள் தமது எதிரிகள் அல்லர் என்பதையும், தமிழ்மக்களின் பெருந்தன்மை எப்படிப்பட்டது என்பதையும் சிங்களமக்கள் உணர்வார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!’**

**4. கேள்வி:-** நீங்கள்தான் ‘ஸ்பொற்லைற்’ நிகழ்ச்சியின் ரசிகர் ஆயிற்றே. கடைசியாக வந்த டான் ரி.வி ‘ஸ்பொற்லைற்’ நிகழ்ச்சியில் தவத்திரு வேலன் சுவாமிகள் அவர்களின் பேட்டியைப் பார்த்தீர்களா?

**பதில்:-** முன்பொருமுறை எங்கள் வீட்டில் இரண்டு பூனைகளை வளர்த்தோம். ஒருநாள் அந்தப் பூனைகளிடம் ஒரு எலிக் குஞ்சு அகப்பட்டுக் கொண்டது. அன்று



அந்தப் பூனைகள் எலிக்குஞ்சை வைத்து படாதபாடுபடுத்தின. அந்தக் காட்சி இப்பொழுதும் என மனதில் இருக்கிறது.

இதை ஏன் இப்போது சொல்கிறேன் என்று நினைக்கிறீர்களா? வேலன் சுவாமிகளின் பேட்டியைப் பார்த்த போது பழைய இந்தச் சம்பவம்தான் எனது ஞாபகத்திற்கு வந்தது. ஆன்மீகவாதியான வேலன் சுவாமிகள் இனப்பற்றாளராய்த் தன்னைக் காட்டுவதற்காக, தீர்மானமும் திட்டவட்டமும் இல்லாத பதில்களைச் சொல்லி உளறிக் கொட்ட, பேட்டி எடுத்தவர்கள் அவரைப் பிராண்டித் தள்ளிவிட்டார்கள்.

யதார்த்தத்திற்குப் பொருத்தமில்லாத அவருடைய அதிதீவிரவாதக் கருத்துக்கள் அவரது பொய்மை உணர்வை மிகத் தெளிவாய் வெளிப்படுத்தின. அப்பேட்டியில் பலதரம் 2009 இல் நடந்த படுகொலைகள் பற்றிக் கூறி சுவாமிகள் உணர்ச்சி வசப்பட்டார். நல்லகாலம், பேட்டி எடுத்தவர்கள் அந்தக் காலத்தில் நீங்கள் சின்மயா மிஷனில் பஜனை செய்து கொண்டிருந்து விட்டு, அங்கிருந்து துரத்தப்பட்டதும்தான் இனஉணர்வு பேசுகிறீர்கள், அக்கொடுமைகள் நடந்து கொண்டிருந்தபோது நீங்கள் ஏதும் பேசாதது ஏன்? எனக் கேட்காமல் விட்டார்கள். கேட்டிருந்தால், சுவாமியாரின் காவி கரைந்து போயிருக்கும்.

(09ஆம் பக்கம் பார்க்க)



# காலிமுகம்

- முருகபூபதி -

## நனவிடை தோய்தற் குறிப்புகள்

சமகாலத்தில் இலங்கைத் தலைநகரத்தின் கேந்திரமாக கருதப்படும் காலிமுகம் ஊடகங்களில் பேசுபொருளாகியிருக்கிறது.

இன்று நேற்றல்ல, இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திற்கு பல கோடி வருடங்களுக்கு முன்பிருந்தே காலிமுகத்தை இந்து சமுத்திரத்தாய் தனது அலைக் கரங்களினால் தொட்டு தழுவிச்சென்று கொண்டேயிருக்கிறாள்.

அவளுக்கு பேசும் சக்தி இருக்குமானால், அங்கே அவள் நீண்ட நெடுங்காலமாக பார்த்து வரும் காட்சிகளைச் சொல்லியிருப்பாள்.

இலங்கை சுதந்திரம்பெற்று 74 ஆண்டுகள் நிறைவெய்திவிட்டன.எனக்கும் 70 ஆண்டுகள் நிறைவெய்திவிட்டன.

நான் குழந்தைப் பருவத்திலிருக்கும்போது, வயிற்றில் புழுக்கள் உருவாகிவிடலாகாது என்பதனால் எனது அம்மாவும், பாட்டியும் (அம்மாவின் அம்மா) வல்லாரைச்சாறு பருகக் கொடுத்திருக்கிறார்கள். இதனை அக்காலத்தில் எமது சமூகத்தில் பூச்சிக்கு மருந்து கொடுத்தல் என்பார்கள்.

அதனால், வயிற்றிலிருந்த புழுக்கள் குறைந்ததோ இல்லையோ, வேறு ஒரு நல்ல பலன் கிடைத்து விட்டது. அதுதான் நினைவாற்றல்.வல்லாரைக்கு நினைவாற்றலைத் தரக்கூடிய மருத்துவக் குணமும் இருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஆர்த்ரைட்டீஸ் நோயாளருக்கும் வல்லாரை சிறந்த நிவாரணி. கொழும்பு இரத்மலானையில் அமைந்துள்ள சித்தாலேப்ப ஆயுர்வேத மருத்துவ நிலையம் பிரசித்தமானது. வெளிநாடுகளிலிருந்தும் அங்கு சென்று சிகிச்சை பெற்று குணமாகி வந்தவர்கள் பற்றியும் அறிந்துள்ளேன்.



தஹநாயக்கா

அங்கே தினமும் நோயாளர்களுக்கு மதிய உணவு வழங்கும்போது, வல்லாரைச்சம்பல், வல்லாரைச்சுண்டல், வல்லாரை துவையல் இவற்றில் ஏதோ ஒன்றையும் உணவுடன் சேர்த்து தருகிறார்கள்.



அண்மைக்காலமாக அச்சில் வெளியாகும் பத்திரிகை ஊடகங்களிலும் எண்ணிம ஊடகங்களிலும் **(Digital Media)** காண்பிக்கப்பட்டுவரும் காலிமுகம் பற்றிய எனது இந்த நனவிடை தோய்தற் குறிப்புகளை எழுதத் தொடங்கியபோது அன்று எனது குழந்தைப் பருவத்தில் வீட்டில் பருகத்தந்த வல்லாரைச்சாற்றின் மகத்துவம்தான் நினைவுக்கு வந்தது.

அந்த காலிமுகத்திற்கும் எனக்கும் உணர்வுபூர்வமான உறவு நீடித்திருக்கிறது.

முன்பு சிறிதுகாலம் எனக்கு தொழில் வாய்ப்பைத் தந்து சோறுபோட்டது அந்த காலிமுகம். அந்த வீதியை 1970 இல் பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் கட்சிகளின் (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி – லங்கா சமசமாஜக்கட்சி – கம்யூனிஸ்ட் கட்சி) கூட்டரசாங்கத்தில் நீர்ப்பாசன, நெடுஞ்சாலைகள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா காலிமுக வீதியை மேலும் அகலமாக்குவதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவையில் பெற்றிருந்தார்.

எனினும் அந்த வீதி நிர்மாணப்பணியை **Territorial Civil Engineering Organization (T.C.E.O.)** என்ற நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு காலதாமதமானது. நான் படித்துவிட்டு வேலை தேடிக்கொண்டிருந்தபோது, அங்கே வீதியை நிர்மாணிக்கும் தொழிலாளர்களை மேற்பார்வை செய்யும் ஓவர்ஸீயர் வேலை கிடைத்தது. ஆனால், அந்த நிறுவனம் நான் உட்பட அனைத்து தொழிலாளர்களையும் தற்காலிக பணி ஒப்பந்தத்தின் கீழேயே தெரிவு செய்தது.

எனினும்மேலதிகாரிகளானபொறியியலாளர்கள் அரசின் நிரந்தர ஊழியர்கள்.

காலை 7.00 மணிக்கு தொடங்கும் வேலைகள் மாலை 5.00 மணிவரையில் நீடிக்கும். கொளுத்தும் வெய்யிலில் கால் கடுக்க நின்று மேற்பார்வை செய்யும் வேலை அது.

கடல் காற்று வீசினாலும் அதிலும் அனல்தான் இருந்தது.

வர்ணக்குடைகளின் கீழே அமர்ந்து இளம் காதலர்கள் அமர்ந்து சல்லாபிக்கும் காட்சியை பார்த்தபோது, வெய்யிலில் எனது சிவந்த மேனி கறுத்துப் போவதனால், என்னை யார் காதலிக்கப்போகிறார்கள் என்ற கவலையும் வந்திருக்கிறது.

அக்காலப்பகுதியில் கறுப்புத்தான் எனக்கு புடிச்ச கலரு பாடல் இடம்பெற்ற ‘வெற்றிக்கொடி கட்டு’ திரைப்படம் வெளியாகியிருக்கவில்லை.

காலிமுகத்தில்பணியாற்றிக்கொண்டிருந்தபோது நான் கண்ட காட்சிகள் பலவற்றை இற்றைவரையில் என்னால் மறக்கமுடியாதிருக்கிறது.

அந்த வீதி, கோல்பேஸ் ஹோட்டலிலிருந்து இன்றைய ஜனாதிபதி செயலகமான அன்றைய நாடாளுமன்றம் வரையில் அகலமாக்கப்பட்டது. அந்த கோல்பேஸ் ஹோட்டலுக்குப் பின்னாலும் பல சுவரசியமான கதைகள் இருக்கின்றன. மக்கள் திலகம் எம்.ஜி. ஆரும், சரோஜாதேவியும் 1965 ஆம் ஆண்டு இலங்கை வந்த சமயத்தில் தங்கியிருந்ததும் இங்குதான்.

1970 களில் தபால் தந்தி அமைச்சராகவிருந்த செல்லையா குமாரசூரியர் தனது அலுவலகத்திற்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ணா வீதி இல்லத்திலிருந்து காரில் புறப்பட்டுவருவார். அவரது கார்ச் சாரதி அவரை அந்த ஹோட்டலுக்கு அருகில் நிறுத்தி, அவரை இறக்கிவிட்டு, அந்தக்காரை செலுத்திவந்து நாடாளுமன்றத்திற்கு முன்பாக நிறுத்திவிட்டு, அமைச்சருக்காக காத்திருப்பார்.

அமைச்சர் குமாரசூரியர், இரண்டு கைகளையும் விசுக்கிக்கொண்டு நடந்துவருவார். எம்மைக்கண்டதும் Good morning சொல்வார். அவருக்கு அப்போதே இரத்தத்தில் கொழுப்பும் இனிப்பும் இருந்திருக்கவேண்டும்.

மாலைநேரத்தில், மற்றும் ஒரு தலைவர் வருவார். அவர்தான் தந்தை எஸ். ஜே.வி. செல்வநாயகம். இவர் கொள்ளுப்பிட்டி அல்பிரட் ஹவுஸ் கார்டன் வீதி இல்லத்திலிருந்து புறப்படுவார்.

தமிழ்மக்களின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்துவந்த தந்தையின் அந்த இல்லத்தில் மலையகத்தைச்சேர்ந்த ஒரு சிங்கள ஊழியர்தான் வீட்டு வேலைகளுக்காக அமர்த்தப்பட்டிருந்தார் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

ஒருநாள் மாலைவேளையில் தந்தையார் அங்கே நடைப்பயிற்சிக்கு வந்தபோது மழை பெய்யத்தொடங்கிவிட்டது. அவர் மெதுவாக ஓடி ஓடித்தான் வருவர். அப்போது அவருக்கு உடல் நடுக்கம் **(Parkinson's disease)** இருந்தது.

மழையில் நனைந்துவிட்ட அவரை கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு, வீதியின் எதிர்ப்புறமாக அமைந்திருந்த எமது யார்ட்டுக்கு அழைத்து வந்து, தலையை துவட்டி துடைப்பதற்கு கைவசம் இருந்த வீரகேசரி பத்திரிகை தாள்களைக் கொடுத்தேன். வீதியின் மறுபக்கம் காருடன் நின்ற அவரது சாரதியை அழைத்துவந்து, மழை விட்டதும் அனுப்பி வைத்தேன்.

அவரது அரசியல் வாழ்வில் பெரும்பகுதி அந்த உடல் நடுக்க உபாதையுடன்தான் கழிந்தது. ஒருசமயம் அவர் நாடாளுமன்றத்தில் தடுக்கிவிழவிருந்தபோது, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எழுந்தோடி தாங்கிப்பிடித்த செய்தி எத்தனை பேருக்குத் தெரியும்?

(09ஆம் பக்கம் பார்க்க)

# பாட்டும் நானே? ....

அவர் மீது முன்பு நான் நல்ல மதிப்பு வைத்திருந்தேன். இப்போது அவரே அதை இல்லாமல் செய்துவிட்டார். 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்று ஒருகாலத்தில் கீதோபதேசம் செய்து கொண்டுதிரிந்தவர் இன்று கடமையைச் செய்யாமலே அரசியல் பயனை எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இன்றைக்கு அவரிடம் ஆன்மீகம் சிறிதும் இல்லை. புகழ் விருப்பம்தான் அவரை முழுமையாய் ஆட்கொண்டிருக்கிறது. இதுதான் இவரது ஆசை என்றால், காவி உடுத்துத் தன் வாழ்க்கையை இவ்வளவு நாளும் வீணாக்கி இருக்கத் தேவையில்லை. இவரை வெளியேற்றிய சின்மயா மிஷன் தன் செயல் நினைந்து இப்பொழுது பெருமைப்படும். ஓர் இந்துமதத்தவனாய் நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

அந்தப் பேட்டியில் மற்றொன்றையும் கவனிக்க முடிந்தது. வழக்கமாக 'சுருக்' என்றும் சுருக்கமாகவும் பேசி பேட்டி எடுக்கும் அந்த இரண்டு இளைஞர்களும் இவரின் தடுமாற்றம் கண்டு எள்ளல் தொனியில் கொஞ்சம் அதிகமாகவே பேசினார்கள். பூனை மெலிந்தால் எலி எதற்கோ வருகிறாயா? என்று கேட்குமாம். அதுதான் அன்று நடந்தது. ஆனால் இந்தப் பாணியை அவ் இளைஞர்கள் தொடராமல் இருப்பது நல்லது!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ சாமியாருக்கு எதிராக வாரிதியார் 'சாமி ஆடிவிட்டார்' போங்கோ!**

**5. கேள்வி:-** நடந்து கொண்டிருக்கும் மக்கள் கிளர்ச்சியில் எல்லா மதத்தலைவர்களையும் காண முடிகிறது. உங்களது இந்துமதத் தலைவர்கள் ஒருவரையும் காணமுடியவில்லையே?

**பதில்:-** இது பற்றி நானும் கவலைப்பட்டேன். 108 சர்வதேசக் குருமார் ஒன்றியங்களின் பெயர்கள் அடிக்கடி அடிபடுகின்றன. அவர்கள் எல்லாம் அதிகாரத்தில் உள்ளவர்களின் வாலுக்கு நெய் தடவுவதை மட்டுமே தமது வேலையாய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உலகத்தோடு ஒட்ட ஒழுகத் தெரியவில்லை. ஆட்சியில் உள்ள தலைவர்களுக்கு அப்பிரானிகளாகச் சென்று பொன்னாடை போர்த்துவதோடு அவர்களின் வேலை பெரும்பாலும் முடிந்துவிடுகிறது. ஒன்று அரசியல் பக்கமே தலைவைத்துப் படுக்காமல் இருக்கவேண்டும். அல்லது உலக அரசியலை அறிந்து செயற்படத் தெரிந்திருக்கவேண்டும். இவர்களிடம் இரண்டுமே இல்லை. தமிழர்கள் மத்தியில் பெரும்பான்மை மதமாக இருக்கும் இந்துமதம் மற்றைய மதங்களிடம் தாழ்ச்சி உறுவதற்கான காரணம் இப்போது புரிகிறது!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'ததாஸ்து'**

# காலிமுகம் ......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று சம்பந்தன் ஐயாவை சஜித் பிரமேதாஸவும் இவரது தாயார் ஹேமா பிரேமதாஸவும் கைத்தாங்கலாக தூக்குவதையும் அழைத்து வருவதையும் ஊடகங்களில் பார்க்கின்றோம். அவர்கள் வயதுக்குத் தரும் மரியாதை அது.

இந்தப்பதிவில் எனது பெருமதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய ஒரு சிங்கள அரசியல் தலைவர் பற்றியும் சொல்லிவிடல்வேண்டும். அவர்தான் கலாநிதி விஜயானந்த தகநாயக்கா.

காலித் தொகுதியின் எம்.பி. இலங்கையின் மூன்றாவது நாடாளுமன்றத்தில் பிரதமராக பதவியில் அமர்ந்த பண்டாரநாயக்கா 1959 ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர், 1960 ஆம் ஆண்டு தேர்தலில் தோற்றுப்போகும் வரையில் பிரதமராக இருந்த எளிமையான மனிதர். அதே சமயம் சர்ச்சைக்குமுரிய தர்மாவேசம் கொண்ட ஒரு கலகக் காரன். அவர் கல்வி மந்திரியாகஇருந்தகாலத்தில்ஏழைமாணவர்களுக்காக பாடசாலைகளில் இலவசமாக பணிஸ் (பண்) வழங்கியவர். நானும் அந்த பணிஸ் உண்டிருக்கின்றேன். அதனால் மாணவர்களால் 'பணிஸ் மாமா' என்றும் புகழப்பட்டவர்.

துணிவகைகளின் விலைவாசியேற்றத்தை கண்டித்து கோவணத்துடன் வந்து நாடளுமன்ற விவாதத்தில் கலந்துகொள்ள முயன்றவர். அவர் கோவணத்துடன் வந்த காட்சி படமாக பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கிறது. சபாநாயகரின் உத்தரவுப்படி பொலிஸார் அன்று அவரை உள்ளே அனுமதிக்கவில்லை.

அந்த எளிமையான மனிதருடனும் காலிமுக வீதியோரத்தில் நின்று உரையாட சந்தர்ப்பம் கிட்டும் என்று நான் கனவிலும் நினைத்திருக்கமாட்டேன்.

அன்று நண்பகல்பொழுது. சூரியன் உச்சி வானிலிருந்து சுட்டெரித்துக்கொண்டிருக்கிறான்.

பஸ் தரிப்பிடத்தில் குடை சகிதம் தகநாயக்கா பஸ்ஸுக்காக காத்து நிற்கிறார். அச்சமயமும் அவர் காலித்தொகுதி உறுப்பினர்.

அவருக்காக அரசாங்க எம்.பிக்களுக்கான மாளிகை (சிரவஸ்தி) இருக்கிறது. அரசாங்கம் காரும் கொடுத்திருக்கிறது. ஆனால், அவற்றையெல்லாம் பயன்படுத்தாமல் சாதாரண குடிமகனைப்போன்று வாழ்ந்தவர் அந்த முன்னாள் பிரதமர்.

காலிமுக வீதியை அகலப்படுத்தும் நிர்மாணப் பணியிலிருக்கும் எனக்கோ எனது மேற்பார்வையின் கீழிருக்கும் தொழிலாளர்களுக்கோ அந்த வேலை நிரந்தரமில்லை என்பதை முதலிலேயே சொல்லியிருக்கின்றேன்.

விரைவில் அந்த நிரந்தரமற்ற நிர்மாணப்பணி முடிந்துவிட்டால், நாம் நிரந்தரமாக வீட்டுக்கு செல்ல வேண்டியதுதான்.

தகநாயக்கா மஹத்தயா (ஐயா) நிற்கிறார். எங்களையெல்லாம் நிரந்தரமாக்கச்சொல்லி நாடாளுமன்றத்தில் பேசச்சொல்லுங்க சேர். – என்று சக தொழிலாளர்கள் என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

நான் அவர் அருகில் சென்று கைகூப்பி வணங்கினேன். அவரும் குடையை பிடித்துக்கொண்டே கைகூப்பினார்.

எமது நிலைமையைச் சொன்னேன்.

அவர் சிரித்தார்.

என்னுடைய எம்.பி. பதவியும் நிரந்தரமில்லைத்தான். மைத்தரிபாலாதானே உங்கள் அமைச்சர். ஏதோ மக்கள் அரசாங்கம் நடப்பதாகத்தானே சொல்கிறார்கள். (அச்சமயம் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமர். தகநாயக்கா சுயேச்சை எம்.பியாக எதிரணி வரிசையில்) மக்களை கவனிக்க வேண்டியதுதானே. எதற்கும் சொல்கிறேன். – என்றார்.

அப்பொழுது பஸ் வந்துகொண்டிருந்தது.


புத்தே அற பஸ்ஸெக்க நவத்தன்ட (மகனே அந்த பஸ்ஸை நிறுத்தும்)

அவர் குடையை மடித்துக்கொண்டார். பஸ் நின்றது. நடத்துநருக்கும் யார் நிற்பது என்பது தெரிந்துவிட்டது. மரியாதைக்காக பஸ்ஸை விட்டிறங்கி, அவர் ஏறுவதற்கு வழிவிட்டார்.

புத்தே மங் கிஹில்லா என்னங் (மகனே நான் சென்று வருகிறேன்)

முன்னாள் பிரதமர் ஏறிய பஸ் புறப்பட்டது.

நான் அந்த பஸ் சென்ற திசையையே பார்த்தவாறு சில கணங்கள் நிற்கின்றேன்.



கோவணத்துடன் தஹநாயக்கா

சில கார்கள் தேசியக்கொடியுடன் அமைச்சரையோ எம்.பியையோ சுமந்துகொண்டு அந்த காலிமுக வீதியில் விரைந்துகொண்டிருக்கின்றன.

சில வருடங்களுக்கு முன்னர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஹெலிக்கொப்டரில் நாடாளுமன்றம் வந்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் அவரின் துணைவியார் ஷிராந்தி ராஜபக்ஷ காலிமுகத்திடலில் நடைப்பயிற்சிக்கு வந்தபோது, ஒரு பிரஜை குறுக்கே வந்தமை அசௌகரியமாகிவிட்டதாம். அதற்காக அந்தப் பிரஜையை பொலிஸார் கைதுசெய்து விசாரித்தனர்.

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற பல சம்பவங்கள் நிகழ்ந்த பிரதேசம் அந்த காலிமுகத்திடல்.

இந்து சமுத்திரத்தை பார்த்தவாறு அமைந்துள்ள முன்னைய நாடாளுமன்றம் இன்றைய ஜனாதிபதி செயலகம். 1921 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அந்தக் கட்டடத்துக்கான வரைபடம் தயாராகி ஒன்பது ஆண்டு காலத்தில் (1930 இல்) அன்றைய கவர்னர் சேர். ஹேர்ட் ஸ்டான்லி என்பவரால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்ட இந்த பிரம்மாண்டமான கட்டடத்துக்குள்தான் முதலில் சட்ட சபையும் பின்னர் நாடாளுமன்றமும் தேசிய அரசுப்பேரவையும் 1982 வரையில் இயங்கின.

பல பிரதமர்களையும் பல எதிர்க்கட்சித் தலைவர்களையும் பல அரசாங்கங்களையும் கண்ட இந்த கட்டடம் 1982 இன் பின்னர் ஜனாதிபதி செயலகமாகி விட்டது.

இந்தக் காலிமுகத்தில்தான் தமிழ்த்தலைவர்கள் 1956 ஆம் ஆண்டு ஜூன்மாதம் தனிச்சிங்கள சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகப்போராட்டம் நடத்தி பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகினர். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட எழுத்தாளர் புதுமைலோலன் (எழுத்தாளர் செங்கை ஆழியானின் அண்ணன்) தாக்குதலுக்கு இலக்கானார். அவரது ஒரு கரம் முறிந்தது. அவர் அங்கிருந்த பேரா என அழைக்கப்படும் சிற்றோடையில் தூக்கி வீசப்பட்டார்.

இச்சம்பவங்களை பதிவுசெய்யும் செங்கை ஆழியானின் நாவல்தான் "தீம் தரிகிட தித்தோம்".

முன்னைய இராசதானியான கோட்டையில் ஸ்ரீ ஜயவர்தனபுரவில் இப்பொழுது நாடாளுமன்றம் இயங்குகிறது. மக்கள் இடம்பெயர்ந்தமை போன்று காலிமுகத்திலிருந்து அது கோட்டைக்கு இடம்பெயர்ந்து விட்டது.

சமகாலத்தில் காலிமுகத்தை முற்றுகையிட்டு மக்கள் தன்னெழுச்சியாக போரடுகிறார்கள்.

அன்றைய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலை மையில் இயங்கிய கூட்டரசாங்கம் 1974 ஆம் ஆண்டு அறிவித்த விலைவாசியேற்றத்தை கண்டித்து ஜே.ஆர். ஜெயவர்தனா – பிரேமதாஸ தலைமையில் மாபெரும் பேரணியொன்று காலிமுகத்தை நோக்கி வரவிருக்கிறதுஎன்றசெய்திமுதல்நாள்வெளியானதும், எமது வீதி நிர்மாணப்பணிகள் நிறுத்தப்பட்டன.

சில லொறிகளில் உயரமான மரக்கட்டைகளும் முட்கம்பிச்சுருள்களும் வந்து இறங்கின. அன்று இரவு எட்டுமணிவரையில் காலிமுகத்தை சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டன. மறுநாள் காலை வேலைக்கு வந்த நாம் அந்த வேலிகளுக்குள்ளிருந்தே பணிகளைத் தொடர்ந்தோம்.

காலையில் பிரமேதாஸ தனது காரை தானே செலுத்திக்கொண்டு அவ்விடத்திற்கு வந்தார். அவரது முகம் விறைத்திருந்தது.

சரி பார்ப்போம் என்று சிங்களத்தில் சொல்லிவிட்டுச் சென்றார்.

அன்று மதியம் அவரது தலைமையில் மாபெரும் பேரணி கொழும்பு மத்தியிலிருந்தும், ஜே. ஆர். தலைமையில் கொழும்பு தெற்கிலிருந்து மற்றும் ஒரு பேரணியும் புறப்பட்டன. ஆனால், அந்த பேரணிகள் காலிமுகத்தை முற்றுகையிடவில்லை.

மறுநாள் அந்தமுட்கம்பி வேலிகளை அகற்றும் பணிகளையும் செய்தோம். இந்து சமுத்திரத்தாய் அனைத்துக் காட்சிகளையும் இன்று போல் அன்றும் பார்த்துக்கொண்டிருந்தாள்.

தற்போது இலங்கை மக்கள், இன, மத, மொழி பேத மற்று அந்த காலிமுகத்தில் "கோட்டா போ" என்று கோஷமிடுகின்றனர். தற்காலிக கூடாரம் அமைத்து போராடிக்கொண்டிருக்கின்றனர்.

நான் ஆஸ்திரேலியாவிலிருந்து, இந்து சமுத்திரத் தாயைப் போன்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றேன்.

# அமரர் கந்தையா நீலகண்டன்

## இன்றைய பவளவிழா தின நினைவுகள்



நாடளாவிய ரீதியில் பலராலும் அறியப்பட்ட ஒரு வராகத் திகழ்ந்தவர் அமரர் கந்தையா நீலகண்டன். இவர் 1947 ஏப்ரல் 16ஆம் திகதி பிறந்தார். 2018 பெப்ரவரி 18ஆம் திகதியன்று தனது 71ஆவது வய தில் காலமானார். இவர் இப்போது வாழ்ந்து கொண் டிருந்தால், இன்று (16.04.2022) அகவை 75ஐ நிறைவு செய்வதன் மூலம் பவளவிழாவை காணும் பெரும்பேற்றை பெற்றிருப்பார். காலன் அவரை தொடர்ந்தும் வாழவிடவில்லை என்பது பெரிதும் வேதனைக்குரியது.

அமரர் நீலகண்டன் யாழ். குடாநாட்டிலுள்ள வடமராட்சி பகுதியின் கரணவாய் கிராமத்தை பிறப் பிடமாகக் கொண்டவர். இவர் தனது கிராமத்து பாட சாலையில் ஆரம்பக் கல்வியையும், உடுப்பிட்டி அமெ ரிக்க மிஷன் பாடசாலையில் இடைநிலைக் கல்வி யையும், யாழ். இந்துக் கல்லூரியில் உயர்கல்வியை யும் மேற்கொண்டு, பின்னர் இலங்கை சட்டக் கல் லூரியில் பயின்று ஒரு சட்டத்தரணியானார்.

நீலகண்டன் பாடசாலை மாணவனாக இருந்த வேளையில், அப்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஈழநாடு பத்திரிகையின் மாணவர் மலர் பகுதியில் 1962ஆம் ஆண்டிலிருந்து ஆக்கங்களை எழுதி வந்ததன் ஊடாக எழுத்துத் துறையில் பிரவேசித்தார். சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்திலும், அங்கு வெளியாகிய சஞ்சி கைகளிலும் சட்டத்துறை தொடர்பான பல கட்டுரை களை எழுதியிருக்கிறார். பின்னாளில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திலும் இணைந்திருந்து, சங்கத்தின் சஞ்சிகை வெளியீட்டுக்கும் பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளார். இவர் சட்ட நிறுவன மொன்றை சொந்தமாக நடத்திவந்த நிலையிலும், அதற்கும் மேலாக சமய சமூகநலப் பணிகள் மீது இவருக்கிருந்த ஈடுபாடு பெரிதும் போற்றத்தக்கது.

எண்பதுகளில் அகில இலங்கை இந்து மாமன் றத்தில் உறுப்பினராக இணைந்து கொண்ட அமரர் நீலகண்டன், இந்து மாமன்றத்தின் பொதுச் செயலா ளராகவிருந்த எஸ். சச்சிதானந்தசிவம் காலமா கியமையால் அந்த வெற்றிடத்துக்கு 1990 ஏப்ரல் 28ஆம் திகதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டார். மாமன்ற அலுவலக செயற்பாடுகளுக்கு சொந்தமா னதொரு கட்டடம் இல்லாத குறைபாடு இருந்ததால், புதிய கட்டடமொன்றை அமைப்பதற்கான முயற் சிகளை அப்போதிருந்த மாமன்றத் தலைவர் அமரர். வி. பாலசுப்பிரமணியம் மற்றும் சில உறுப்பினர்களு டன் இணைந்து மேற்கொண்டு வெற்றிகண்டவர் இவர். 1996ஆம் ஆண்டு கொழும்பு மாநகரில் ஐந்து மாடிகளைக் கொண்ட உயர்ந்த கட்டடமொன்று உரு வாக்கம் பெற்றமையானது அமரர் நீலகண்டனின் அரும்பெரும் சேவையை எடுத்துக் காட்டி நிற்பது வர லாற்றுப் பதிவாக அமைந்துள்ளது. சமயப் பணியை மட்டும் மேற்கொண்டு வந்த இந்து மாமன்றம், சமூகநல கல்விப் பணிகளை ஆற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அதனூடாக நாடளாவிய ரீதியில் ஏராளமான இந்து மக்கள் பலவகையிலும் விமோசனம் பெறுவதற்கு வழிவகுத்த பெருமை க்குரியவர். யாழ்ப்பாணத்திலும் மாமன்றப் பணி மனையொன்றை நிறுவவேண்டும் என்ற தனது விருப்பத்தை நிறைவேற்றி வெற்றிகண்டவர்.

இவரது பெருமுயற்சியால் அறிமுகமான இந்து மாமன்ற ஆன்மிக சஞ்சிகையான 'இந்து ஒளி' இந்து மக்கள் மத்தியில் பேரபிமானமும் பெருமதிப்பும் பெற்றுத் திகழுவதற்கும், இருபத்தொரு வருடங் களை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கும் இவர் வழங்கிவந்த ஆதரவும் ஊக்குவிப்பும் காரணமாக அமைந்திருப்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

இந்து மாமன்ற பொதுச் செயலாளராகப் பதவி வகித்த அமரர் நீலகண்டன் 2012 டிசெம்பர் 2ஆம் திகதியிலிருந்து மாமன்றத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு மறையும் வரை பெரும்பணியாற்றி வந் தவர். இவர் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் தலைவராகவும், இந்து வித்தியாவிருத் திச் சங்கத்தின் செயலாளராகவும் மட்டுமல்ல, கொழும்பு விவேகானந்த சபை போன்ற பல சமய நிறுவனங்களிலும் பொறுப்பான பதவிகளை வகித்து வந்திருப்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவிருந்த எஸ். சிவகுருநாதனின் மறைவுக்குப் பின், அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம் வரையிலான சில மாதங் கள் அதன் தலைவராகவும் பணியாற்றியிருப் பதுடன், யாழ். பல்கலைக்கழக பேரவையிலும் உறுப் பினராக இணைந்திருந்து சேவையாற்றியுள்ளார்.

சிறந்த ஆளுமையும், சமயப் பற்றும், தமிழுபி மானமும் மிக்கவராக விளங்கிய அமரர் நீலகண் டனிடம் மேலோங்கியிருந்த மனிதநேயம், மனி தாபிமானம், பரோபகாரம், விருந்தோம்பல், உபசாரம் போன்ற பலவகையான உயர் பண்புகள் மக்கள் மத்தியில் இவரை ஓர் உத்தமராகப் போற்றவைத் தது. இவரிடம் கண்டிப்பும் இருந்தது, அதேவேளை யில் கருணையும் இருந்தது. அனைவருடனும் அன்பாகப் பழகும் பண்பும் அன்னாரை உயர்த்தி வைத்தது. தனிமரமாக மட்டுமல்ல, கனிமரமாகவும் நின்று, சைவத் தமிழ் சமூகத்திற்கு பெருநிழல் தந்த பெருந்தகை என்று இவரை சொல்வதில் தவ றில்லை.

அமரர் நீலகண்டன் மறைந்தாலும், இவருடன் பழகிய, இவரை அறிந்த அனைவரினதும் நெஞ்சி ருக்கும்வரை இவரது நினைவிருக்கும் என்பது மட் டும் உண்மை.

- அ.கனகசூரியர் -

# பொலிஸ் தங்கும் அறையில் மரணமடைந்த சார்ஜன்ட்

## கல்முனை தலைமையகத்தில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)



பொலிஸ் தங்குமிட அறையில் மரணமடைந்த பொலிஸ் சார்ஜன்டின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கல் முனை ஆதார வைத்தியசாலை சவச் சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள் ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பகுதியில் அமைந்துள்ள பொலிஸார் தங்குமிட அறையில் உறக்கத்திற்காக சென்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை மரணம டைந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டிருந்தார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கல் முனைபதில்நீதிவான்ஏ.எல்.நதீர்விசாரணை மேற்கொண்டார். சடலத்தை கல்முனை ஆதார வைத்தியசாலைக்குப் பிரேத பரிசோ தனைக்காக கொண்டு செல்லுமாறு உத்தர விட்டார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மொனராகலை மாவட்டம் தம்பகல்ல பகுதி மக்குல்ல நக ரத்தைச் சேர்ந்த 56 வயதையுடையவர்,3 பிள்ளைகளின் தந்தையான திசாநாயக்க முதியன்சலாகேகருணாரத்ன என்பவராவார்.

இவ்விடயம் தொடர்பாக அம்பாறை தடய வியல் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். மேல திக விசாரணைகளை கல்முனை தலை மையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மரணமடைந்த பொலிஸ் அதிகாரி 30 வருடங்களாக பொலிஸ் சேவையில் இருக் கின்றார். சுவாச நோய், இருதய நோய் தொடர் பில் மருத்துவ சேவையைப் பெற்று வந்துள் ளார் என ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

# போராட்டக்காரர்களுக்காக இலவச இணைய வசதிகள்



கொழும்பு காலிமுகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிராக கடந்த 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மக்கள் எழுச்சிப் போராட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) 7 ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக் கப்பட்டது.

இங்கு முன்னெடுக்கப்படும் போராட்ட களத்தில் ஆர்ப்பாட்டக்காரர் களுக்கு இலவச 4G - 5G வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் போராட்ட களத்துக்கு அருகாமையில் தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்று நிறுவப்பட்டுள்ளதோடு அதற்கான இணைப்புகள் எதுவும் இன்னும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

# ஜெனரேட்டர் வெடித்ததில் பெண்ணும் மகளும் மரணம்

மின்கசிவு காரணமாக வீட்டில் இருந்த ஜெனரேட்டர் வெடித்ததில் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த பெண்ணும் அவரது மகளும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் பதுளை கெப்பட்டிபொல பிரதேசத்தில் வசிக் கும் 38 வயதுடைய பெண் மற்றும் அவரது 9 வயது மகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த 29 ஆம் திகதி வீட்டில் இருந்த ஜெனரேட்டர் வெடித்ததில் குறித்த பெண்ணும் அவரது மகள் மற்றும் மகனும் பதுளை பொது வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இனவாதம் பரப்பப்பட்ட நாட்டில் இன ஐக்கியம் தோன்றியுள்ளது!

## பழனி திகாம்பரம் எம்.பி. வரவேற்கின்றார்



சுயநல அரசியல் காரணங்களுக்காக மக்கள் மத்தியில் தூவப்பட்ட இனவாதக் கருத்துகள் எடுபடாமல் ஒரே நோக்கத்தத்தில் நாட்டின் சுபீட்சத்துக்காக மூவின மக்களும் ஒற்றுமையோடு போராடுகின்ற நிலைமை உருவாகியுள்ளமை இந்தத் தமிழ் – சிங்களப் புத்தாண்டில் மகிழ்ச்சி தரும் விடயமாகும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தமது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தமது செய்தியில் –

இந்த நாட்டில் இனவாதத்தை வைத்து அரசியல் குளிர்காய்ந்த நிலைமை மாற்றம் அடைந்து தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி ஒன்றுபட்டு போராடும் சந்தர்ப்பம் இயல்பாகவே தோன்றியுள்ளது. இனவாதத்துக்கு சாவு மணி அடிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் நாடு சுபீட்சம் காண வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லாமல் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒற்றுமை எதிர்காலத்தில் கட்டிக் காக்கப்பட வேண்டும். பிரித்து வைத்து அரசியல் செய்வோருக்கு எதிர்காலத்தில் இடம் தரக் கூடாது.

நல்லது செய்தால் கைதட்டி வரவேற்கும் மக்கள் அநியாயம் நேரும் போது தட்டிக் கேட்கத் தயங்க மாட்டார்கள் என்பதை அண்மைக் கால சம்பவங்கள் எடுத்துக் காட்டியுள்ளன. மக்களை ஏமாற்றி அவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக் குறியாக்க முயற்சிப்போருக்கு தகுந்த பாடத்தைப் புகட்டுவார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டுக்கு முன்னர் அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றத்தால் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள எழுச்சியும், வேகமும் எதிர்காலத்தில் அர்த்தமுள்ள அரசியலுக்கு உந்து சக்தியாக அமைய வேண்டும். அந்த வகையில் மலரும் புத்தாண்டு நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் மிக்கதாகவும், சீர்குலைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்தும் சக்தி உள்ளதாகவும், புதிய மாற்றத்துக்கு அடித்தளம் இடுவதாகவும் அமைய மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். – என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகுகின்றார் சியம்பலாபிட்டிய



எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளார் என ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்லவில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த வார நாடாளுமன்ற அமர்வின் முதல் பணியாக புதிய பிரதி சபாநாயகரை நியமிக்கும் பணி நடக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வாக்குவாதம் கொலையில் முடிவு

சிகரெட் வாங்குவதில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். மாதம்பே முகுனுவடவன – மஹகம பிரதேசத்தில் உள்ள கடை உரிமையாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நான்கு பேர் கடைக்கு வந்து சிகரெட் கேட்டுள்ளனர். அப்போது சிகரெட் இல்லை என கடையின் உரிமையாளர் கூறியமையை அடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாக்குவாதம் முற்றி கடை உரிமையாளரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த வர்த்தகர் சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வரும் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மாதம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

### ராஜபக்ஷ குடும்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டக்காரர்களது கோரிக்கைகளாவன:–

★ உடன் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும்.

★ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களும் பதவி விலக வேண்டும்.

★ அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவருவதுடன் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள அத்தியாவசிய சேவைகள், ஏனைய துறைகளை மீட்டெடுத்தல் வேண்டும்.

★ இடைக்கால அரசை ஸ்தாபித்து ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள், ஏனைய அரசியல்வாதிகள் கொள்ளையடித்த நிதி மற்றும் சொத்துக்களைப் மீளப்பெறுவதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

★ ஆறு மாதங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும்.

## கோட்டகோகமவில் சிறுமி திடீர் மயக்கம்

கொழும்பு, ஏப்ரல் 16

காலி முகத்திடலுக்கு அருகாமையில் நடைபெற்ற போராட்டத்திற்கு ஆதரவளிக்க வந்த மக்கள் மத்தியில் இருந்த சிறுமி ஒருவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

12 வயதுடைய சிறுமி ஒருவர் திடீரென சுகவீனமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது

சிறுமியை சிகிச்சைக்காக கோட்டகோகம என பெயரிடப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அடிப்படை சிகிச்சை பிரிவுக்கு அழைத்து சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### தமிழ் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த எவருமே அரசில் இருக்கக் கூடாது என 2010 ஆம் ஆண்டு, 2015 ஆம் ஆண்டு, 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல்களில் தமிழ் மக்கள் சொல்லி விட்டனர். 2005 ஆம் ஆண்டு சிங்கள மக்கள் யோசித்து வாக்களித்திருந்தால் ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வந்திருக்க மாட்டார்கள். இன்றுதான் சிங்கள மக்கள் அதைச் சொல்கின்றனர். இது எமக்குச் சிரிப்பாக இருக்கின்றது.

யார் இந்தப் போராட்டக்காரர்கள் என்று பார்த்தால் இளைஞர்கள் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. ராஜபக்ஷக்கள் இங்கே இடம்பெற்ற போரைக் காட்டி கடன் வாங்கினார்கள். இப்போதும் நாட்டைக் காட்டி கடன் வாங்கி இருக்கிறார்கள். நாம் அன்று அல்லல்பட்டோம். எங்களுக்காக ஒருவர் கூட அன்று பேசவில்லை. ஆனால், இப்போது போராட்டத்தில் உள்ள இளைஞர்கள் இதை உணர்வார்கள்.

நாம் ஒரு தசாப்தமாக மின்சாரம் இல்லாமல், எரிபொருள் இல்லாமல் இருந்தோம். எவ்வளவு துன்பங்களை அனுபவித்தோம். அன்று எமக்காக யாரும் வரவில்லையே என்று இப்போது தமிழ் மக்கள் சிந்திக்கின்றனர். அதற்காக நாம் அப்படியே இருக்கமாட்டோம். சிங்கள மக்கள் அன்று செய்த தவறைச் செய்ய மாட்டோம். உள் மனதிலே உறுத்தல் இருந்தாலும், இன்றைய உங்களின் போராட்டத்துக்கு நாம் ஆதரவு கொடுப்போம்.

இதே காலிமுகத்திடலில் 66 வருடங்களுக்கு முன்னர் சாத்வீகப் போராட்டத்தை அன்று மேற்கொண்டோம். இதைத் தற்போதைய இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அன்றும் நாம் சமத்துவத்துக்காகப் போராடினோம். ஆகவே, உங்களின் போராட்டத்தின் நோக்கத்தை அறிவதற்கு நாம் இப்போது ஆவலாக உள்ளோம்.

தம்பி போனால் அண்ணன் ஆட்சிப் பீடம் ஏறுவார் என்ற பயம் வேண்டாம். இரண்டு தடவை அவர் ஜனாதிபதியாக இருந்து விட்டார். ஆகவே, நாடாளுமன்றம் அதை முடிவு செய்யும். நிலையான அரசு இப்போது அவசியம். அதற்குப் பல முயற்சிகள் நடைபெறுகின்றன – என்றார்.

### நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்களிக்காது நடுநிலை வகிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதுபாண்டி ராமேஸ்வரன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவர் தலைமையிலான அரசும் பதவி விலக வேண்டும் எனக் கோரி வருகின்ற நிலையிலேயே எதிர்க்கட்சியினர் அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதுமாத்திரமன்றி நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிகொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்கும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு கட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசில் இருந்து விலகிய போதிலும் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் நடுநிலையாகச் செயற்படப் போவதாக அறிவித்திருக்கின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இந்த அறிவிப்பானது மலையகத்தில் கடுமையான எதிர்ப்பையும் விமர்சனங்களையும் தோற்றுவித்துள்ளது.

அரசில் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் கடந்த வாரத்தில் இராஜாங்க அமைச்சுப் பதவியையும் இராஜிநாமா செய்திருந்தார். இந்நிலையில், நாட்டு மக்களும் அதேநேரம் இளைஞர்களும், யுவதிகளும் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவரது தலைமையிலான அரசையும் கடுமையாக விமர்சித்து பதவி விலகிச் செல்லுமாறு கூறி வருகின்ற நிலையில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படுகின்ற நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என்ற நிலை இருக்கையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நடுநிலை வகிக்கப் போவதாக அறிவித்திருப்பது அரசுக்கு ஆதரவை வழங்குவதாக அமைந்திருக்கின்றது என மலையக அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# கடூழியச் சிறையை அனுபவிக்கும் ரஞ்சனுக்கு கோட்டாவின் மன்னிப்புத் தேவையில்லையாம்

## அவரைச் சந்தித்த பின்னர் எதிரணி எம்.பிக்கள் தெரிவிப்பு

நீதிமன்றை அவமதித்தமைக்காக 4 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, அத்தண்டனையை அனுபவித்துவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று முன்தினம் புத்தாண்டு இனிப்புக்கள் மற்றும் பரிசுப் பொதியுடன் சென்று நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்ணான்டோ மற்றும் மனு நாணயக்கார ஆகியோர் சந்தித்தனர்.

வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேற்று பகல் புத்தாண்டு சுப நேரத்தில் சென்ற இருவரும் ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்து நலன் விசாரித்த பின்னர் ஊடகங்களிடம் பேசினர்.

இதன்போது மனு நாணயக்கார எம்.பி. கருத்து தெரிவிக்கையில் –

"நாம் எமது சகோதரன் ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்தோம். இம்முறை நாட்டில் வழக்கமான புத்தாண்டு கொண்டாட்டங்கள் இல்லாத நிலையில், போராட்டங்களில் ஈடுபடுவோரை மனதார வாழ்த்துகிறோம்

எமக்கும் அந்த போராட்டங்களில் பங்கேற்க விருப்பம் உள்ளது. எனினும் அப்போராட்டங்களுக்கு கட்சி, நிற அடையாளங்கள் பூசப்படக் கூடாது என்பதால் பங்கேற்காமல் இருக்கிறோம். எனினும் எமது பூரண ஆதரவு போராட்டங்களில் ஈடுபடு வோருக்கு உள்ளது. புதிதாக சிந்திக்கும், புதிய தலைமுறையை நாம் வாழ்த்துகிறோம்.

ரஞ்சன் சிறையில் தற்போது மிக்க நலமாக தெம்புடன் இருக்கிறார். அவருக்கு நந்தசேன ஜனாதிபதியின் பொது மன்னிப்பு தேவை இல்லை என அவர் குறிப்பிட்டார். எந்த குற்றமும் செய்யாது ரஞ்சன் தண்டனை அனுபவிக்கின்றார்.

காலி முகத்திடல் போராட்ட களத்தில் பாடகி நந்தா மாலினி கேட்ட கேள்வியான, குற்றவாளிகள் விடுதலையாவார்களாயின் எதற்கு இந் நாட்டின் சட்டம் எதற்கு? இந்நாட்டின் நீதிமன்றங்கள் எதற்கு? என்றே கேட்க வேண்டியுள்ளது." – என தெரிவித்தார்.



ஹரீன் பெர்ணான்டோ எம்.பி. கருத்து தெரிவிக்கையில் – "ரஞ்சனுக்கு இன்னும் 6 மாதங்களே சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியுள்ளது. அதனை அவர் அனுபவிப்பார் எனவும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பு தேவை இல்லை எனவும் தெரிவித்தார். அத்துடன் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் அவர் தமதுப்இதயபூர்வமான வாழ்த்துக்கள் என தெரிவித்தார்" – என ஹரீன் பெர்ணான்டோ கூறினார்.

# தவறான பொருளாதார கொள்கையால் இலங்கையின் பொருளாதார வீழ்ந்தது

## முன்னாள் இந்திய நிதியமைச்சர் சிதம்பரம் கருத்து

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் தவறான பொருளாதார கொள்கையே என முன்னாள் இந்திய மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

சிவகங்கையில் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில், இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் தவறான பொருளாதார கொள்கையே என தெரிவித்தமையுடன், அதே சாயல் இந்திய பொருளாதாரத்திலும் அது உள்ளது என்றும் பெட்ரோல், டீசல் மீது அதிக வரி விதித்து வருவதுடன் அந்த பணத்தை என்ன செய்கிறார்கள் என தெரியவில்லை என்றும் கூறினார்.

இதுகுறித்து மேலும் பேசிய அவர், "இந்த தவறான பொருளாதார கொள்



கையால் சில்லறை பணவீக்கம் 7 சதவீதத்தை தாண்டியுள்ளது. இலங்கைக்கு ஏற்பட்ட நிலை இந்தியாவிற்கு வந்துவிட்டது என கூறவில்லை. அவ்வாறு இந்தியாவிலும் ஏற்படும் அபாயம் இருக்கிறது என எச்சரிக்கிறேன்." – என்றார்.

# ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் மட்டு. ஏறாவூரில் நான்கு பேர் கைது

மட்டு ஏறாவூரில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் 4 பேரை இன்று கைது செய்தமையுடன் ஹெரோயின், கஞ்சா மற்றும் ஒரு மோட்டர் சைக்கிள், ஒரு சைக்கிள் என்பனவற்றைத் தாம் மீட்டுள்ளனர் ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர்.

பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து நேற்று பகல் ஏறாவூர் பெலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் ஏறாவூர் பகுதியிலுள்ள வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஹெரோயினை எடுத்துகொண்டு சென்ற ஒருவரை மடக்கி பிடித்துக் கைது செய்தமையுடன் அவரிடமிருந்து 130 மில்லிக்கிராம் ஹெரோயினை மீட்டனர்.

இதனை தொடர்ந்து மைலம்பாவெளி பகுதியில் வீதியில் வைத்து சைக்கிளில் பிரயாணித்த மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்தனர். அவரிடமிருந்து ஆயிரம் மில்லிக்கிராம் கஞ்சாவை மீட்டனர்.

மோட்டார் சைக்கிளில் பிரயாணித்த மட்டக்களப்பு நாவற்கேணி மற்றும் மைலம்பாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த இருவரைக் கைது செய்து அவர்களிடமிருந்து 2 ஆயிரத்து 50 மில்லிக்கிராம் கஞ்சாவையும் ஒரு மோட்டர்சைக்கிளையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட 4 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வரிசையிலும், போராட்டத்திலும் நிற்பதுதான் மக்களுக்கு அரசு வழங்கிய புத்தாண்டுப் பரிசு

## விசனம் தெரிவிக்கிறார் இராதாகிருஷ்ணன் எம்.பி.



புத்தாண்டைக் கொண்டாட வேண்டிய பொது மக்கள் இன்று வீதி ஓரங்களில் அத்தியவசிய பொருள்களுக்காக வரிசையில் நிற்கின்ற நிலைமையும், போராட்டங்களில் ஈடுபடுகின்ற சூழ் நிலையும் ஏற்பட்டிருக்கின்றன. இதுவே இந்த அரசாங்கம் இந்த நாட்டு மக்களுக்கு கொடுத்த புத்தாண்டு பரிசாகும்.

மேலும், இந்த சூழ்நிலைக்கு காரணம் கடந்த இரண்டு வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பிழையான பொருளாதார கொள்கையாகும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுவருடத் தினத்தன்று நுவரெலியாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையினுடைய பொருளாதார பின்னடைவுக்கு முக்கிய காரணம் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக எதிர்கட்சிகள் கூறிய விடயங்களை பொருட்படுத்தாமல் அரசு தன்னிச்சையாகச் செயல்பட்டமையே.

நாங்கள் தொடர்ச்சியாக சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சுவார்த்தையில் ஈடுப்படுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினோம்.

மீள் செலுத்த வேண்டிய கடன்களை செலுத்துவதை நிறுத்தி சம்பந்தப்பட்டவர்களோடு பேச்சு நடத்தி தவணைக் கட்டணக் காலத்தை நீடிக்குமாறு கோரிக்கை முன்வைத்தோம். ஆனால் இந்த எந்தவொரு கருத்தையும் ஏற்றுக்கொள்ளாத அரசாங்கமும், அதிகாரிகளும் செயல்பட்டதன் காரணமாக அதன் விளைவை இன்று மக்கள் எதிர்நோக்கியிருக்கின்றார்கள்.

இதற்கு முக்கிய காரணமாக இருந்தது மத்திய வங்கி ஆளுநர்களாக செயல்பட்டவர்கள் முழுக்க முழுக்க – நூறு – வீதம் அரசியல் மயப்பட்டுச் செயல்பட்டமை தான். அவர்கள் சரியான தீர்மானங்களை சரியான நேரத்தில் எடுக்க தவறிவிட்டார்கள். ஒரு நாட்டில் ஜனநாயகச் செயல்பாட்டில் நாடாளுமன்றம், நீதித்துறை என்பன முக்கியத்துவம் பெறுவது போல, மத்திய வங்கியும் சுயாதீனமாக செயல்பட வேண்டிய ஓர் அமைப்பு. ஆனால் அதை அரசியல் மயமாக்கியதன் காரணமாக இன்று இந்தப் பொருளாதார பின்னடைவை நாம் சந்தித்திருக்கின்றோம்.

அளவுக்கு அதிகமாக பணம் அச்சிடப்பட்டதால் இன்று எங்களுடைய ரூபாவின் பெறுமதி நாளுக்கு நாள் வலுவிழந்து வருகின்றது. எனவே இன்றைய மோசமான சூழ்நிலையை கருத்திற்கொண்டுபுதிதாகதெரிவுசெய்யப்பட்டுள்ள மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவை சுதந்திரமாகவும் சுயாதீமாகவும் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து தரப்பினரும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவர் திறமையான சிறந்த அனுபவத்தை கொண்ட ஒருவர். எனவே அவருடைய கருத்துகளை செவிமடுத்து முன்னோக்கி சென்றால் மாத்திரமே எங்களுடைய இலங்கை பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

எதிர்வரும் காலத்தில் இந்த நாட்டில் பிரதமராக வரக்கூடியவர் மதத்தை முன்நிலைப்படுத்தாது மக்களை முன்நிலைப்படுத்தி செயல்படுகின்ற ஒருவராக இருக்க வேண்டும். – என்றார்.

# பிரதமர் அமர்ந்து பேச பிரத்தியேக இடம் கோட்டாகோகமவில் அமைக்கப்பட்டது!

கொழும்பு, ஏப். 16

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோடு கலந்துரை யாடுவதற்காக காலி முகத்திடலில் உள்ள கோட்டா கோகமவில் பிரத்தியேக இடமொன்றை போராட்டக் காரர்கள் அமைத்துள்ளனர்.

காலிமுகத்திடலில் தொடர்ச்சியாக போராட்டத்தை முன்னெடுத்து வரும் போராட்டக்காரர்களால் புதிய கிராமமொன்று 'கோட்டாகோகம' என்ற பெயருடன் உருவாக்கப்பட்டது. இப்பகுதியில் இப்போது பிரதமருடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவென பிரத்தியேக இடமொன்றை உருவாக்கி வைத்துள்ளதுடன், இது தொடர்பிலான படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

காலிமுகத்திடலில் போராட்டம் நடத்துவோரை பேச சுக்கு வருமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைத்துள்ள நிலையில், அவர்கள் கோட்டாகோகமவில் பிர



தமர் வந்து தங்களுடன் பேசுவதற்கு பிரத்தியேக இடமொன்றை அமைத்துள்ளனர்.